REGD 4642 M.

ா விபரம்
—
ஆண்டு ரூ 7.
„ 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 2—4—50 | இதழ் 40



★

கடைசி மூச்சு காற்றில் கலக்கும்வரை அவருடைய இதயத்தை விட்டு இலட்சியப் பணி குறித்த ஆசை அடங்கியதில்லை. அம்மாவீரர் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி, தலைமை தாங்கி நடத்தி வரும் தமிழர் பெரும் படையின் காட்சி! 1938-ல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது திருச்சியிலிருந்து புறப்பட்டுக்கால் நடையாகவே சென்னை சேர்ந்த தமிழர் படையுடன் தளபதி அழகிரி காஞ்சி வந்து சேர்ந்த காட்சி இது!

★

# ★ இலட்சியவீரர் ★

[ அரங்கண்ணல் ]

## இருபது ரூபாய்கள் !

கோபத்தோடு கேட்டார், 'ஏன் கொடுத்தீர்கள்? எப்படிக் கொடுக்கலாம்' என்ற அதிகார ஆவேசம் அவருடைய வார்த்தையில் எதிரொலித்தது!

எதிரே நின்றவர் இதை எதிர் பார்க்கவில்லை, எனவே திகைத்தார், 'இவரா இப்படிக் கேட்கிறார். நாம் என்ன செய்துவிட்டோம். வந்தவர் வழிச்செலவுக்குப் பணமில்லை என்று திண்டாடினால், அதைக் கண்டு இரக்கங்கொண்டு இருபது ரூபாய் கொடுப்பதா குற்றம்' என்ற கேள்விகள் அவர் இதயத்தில் எழும்பலாயின!

"என்னங்க யோக்கியதை. என்னமோ, அவன்கேட்டான், நான் கொடுத்துவிட்டேன் என்று பதில் சொல்லிவிட்டா போதுங்களா? கொஞ்சங்கூடப் பொறுப்பு வேணாங்களா?—தயவுசெய்து மன்னிச்சுங்க, இப்படியெல்லாம் நடக்கப்படாதுங்க!" இப்படி வார்த்தைகள் வந்துகொண்டிருந்தன, 'இருபது ரூபாய்தானே' என்று சாதாரணமாக எண்ணித் தகவல் கூறவந்தவரை நோக்கி.

'இருபது ரூபாய்தானே. எதற்காகக் கொடுத்தீங்க......ஊருக்குப் போகப் பணமில்லையென்றா? சரி, சரி. அவர்தான் என்ன செய்வார்! பரவாயில்லை!' இப்படிப் பதில் வருமென்று எதிர்பார்த்தார். எனவேதான் கூறினார் "ஊருக்குப்போக பணமில்லைன்னு கேட்டாருங்க. இருபது ரூபாய் கொடுத்தேனுங்க" என்பதாக!

கேட்டவர் முதலாளியல்ல — எதிரே நின்றவரும் அவருக்கு அடிமைப்பட்ட குமாஸ்தாவல்ல! எனினும் அவர் கேட்டார் ஆத்திரத்துடன்—இவர் திகைத்து நின்றார் ஆச்சரியத்துடன்!

தகவலைச் சொன்னவர் ஜில்லாகழகத்தின்செயலாளர். எனினும் கணக்கு ஒப்புவித்தார்—பின் கவலைப்பட்டார்: "ஐயா, ரொம்பஆத்திரப்படாருங்க...என்மேல் என்னதப்பு...... ஊருக்குப்போகப் பணமில்லைன்னு, கஷ்டப்பட்டா, அனுப்பிவைக்கிறது நம்ப பொறுப்பு இல்லீங்களா...நான் தானே அவரைக் கூப்பிட்டிருந்தேன் ......இதிலென்ன தப்பு?" என்று கூறினார்—தன்னைக் கேட்டவரிடமல்ல—தனது நண்பர்களிடம்!

X X X

அவர் வந்தது அவசர அழைப்பைக்கண்டு — பொதுக்கூட்டத்தில் பேசவேண்டும் புறப்படுக — என்ற தந்திச்செய்தி தள்ளாத நிலையிலிருந்த அவரை ஓடிவரச் செய்தது சென்னைக்கு!

வந்தார் — வந்ததும் 'இரகசியக் கமிட்டிக்கூட்டத்திற்கும்' சென்றார்; எதிர்பாராதவிதமாக பிடிபட்டோர், எல்லோரையும் போலீசார் கைது செய்தனர் — இவர், விரும்பியிருந்தால் தன் உடல்நிலையைக் கூறித் தப்பியிருக்கலாம், எனினும் அந்த அஞ்சா நெஞ்சன் அவ்வழியைவிரும்பவில்லை! சிறைக்குச் சென்றார், தனது சகாக்கள் நூறுபேருடன்!!

"கவர்னர் ஜெனரல் சி. ஆர். சென்னைவந்து திரும்பியதும்" கதவு திறக்கப்பட்டது—கொண்டுபோய்ப் பூட்டிவைக்கப்பட்ட கழகப்பிரமுகர்கள், தலைவர் எல்லோரும் திறந்துவிடப்பட்டனர்!

எலும்பை நோய்க் கிருமிகள் உருக்கி, உடலைக்கூறாக்கிக் கொண்டிருந்தபோதும் கலங்காது, முந்நூறு மைல்கள் ரயில் ஏறிவந்து, சிறைச்சாலை சென்று, ஆறு நாட்கள் அவதிக்குப்பின், சோர்வின் பிம்பமாய்த் திரும்பிய அவருக்குத்தான் இருபது ரூபாய் தேவைப்பட்டது.

கேட்டார்—இல்லாதகாரணத்தால்! கொடுத்தார்—அவரை நாம் அழைத்ததால்தானே வந்தார் என்று எண்ணிக்கொண்டு.

கோபித்தார் — கொடுத்தவனைப் பார்த்து கட்சியின் தலைவர்! உடனே, கடிதம் எழுதி, "இருபது ரூபாயை

## காலம் மறக்காது!

கல்லெறிக்கும், புல்லுருவிக் கயவர்களின் தூண்டுதற்கும்
சொல்லெறிக்கும், சுயநலத்தான் சூழ்ச்சிக்கும் அஞ்சாது
நல்வழியை எங்களுக்கு நவின்றுறவே எடுத்துரைத்த
வல்லவனே உமைமரணம் வஞ்சித்து விட்டதையோ!

ஏச்சுக்கு இலக்கான இனத்தாரை மீட்பதற்கு
வீச்சுவாள் பகுத்தறிவை வீசிஅறப் போர் தொடுத்தீர்!
பேச்சிற்கும் எழுத்திற்கும் தடைவிதித்த அரசினரை
மூச்சின் முடிவுவரை மொழிகாக்கத் தானெதிர்த்தீர்!

ஆற்றல் விளைத்தெந்தை அழகிரியே உம்மெண்ணம்
ஏற்றம் உடைத்தையா இனிஎங்கள் மனத்துயரை
மாற்ற வருவீரோ! மறுமலர்ச்சித் திராவிடரைத்
தேற்ற வருவீரோ! திண்ணியனே உம்வாழ்வில்

நாட்டெழிலே வீட்டெழிலாய் நலங்கருதித் தானுழைந்தீர்!
மேட்டிமையாய் நம்மினத்தார் மேலோங்கி வாழ்வதற்குத்
தீட்டியதிட் டங்களெல்லாம் திராவிடத்தின் விடுதலைக்காம்
காட்டியநல் வழியைஎன்றும் காலம் மறக்கவொண்ணா.

—முத்துக்கூத்தன்.

...ம் இங்கு அனுப்பிவிட்டு மறுவேலை பார்க்குமாறு கண்டித்து எழுதுங்கள்" என்றும் உத்தரவு போட்டார்!

கேட்டு வாங்கிச் சென்றவருக்கு இருபது ரூபாய்கள்' சாதாரணமானதல்ல; கேட்கச் சொன்னவருக்கோ மிகமிகச் சாதாரணத் தொகை. எனினும், எழுதச் சொன்னார், ஆத்திரத்துடன்!

X X X

கடிதம் எழுதப்பட்டதா, என்ன ...தில் வந்தது, என்ற விஷயங்கள் ...மக்குத் தெரியாது — அடுத்தமுறை ...க "இருபது" வாங்கிச் சென்ற ...ற்காகக் கோபத்துக்காளான அந்த அஞ்சா நெஞ்சனை நாம் காணமுடியவில்லை! சம்பவம் நடந்து சில மாதங்கள் கூட முடியவில்லை — அருமை வீரர் அழகர்சாமி, நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்ற சோகச் செய்தி நம்மைக் கலங்கவைத்தது!

இயக்கமே தன்வாழ்வு என்று வாழ்ந்து வீழ்ந்த அம் மாவீரன் — ...லைவர் அறிக்கையைக் கண்டதும் ...மிட்டிக் கூட்டத்தில் கலந்து ...கொள்ளலாம் 'கவர்னர்ஜெனரலுக்கு கருப்புக்கொடி பிடிப்பதைக் காண...ம்' என்ற ஆசை துடிக்க, ...தே நேரத்தில் பொதுக் கூட்டத்...ல் பேசவேண்டிய கடமையும் இருக்கிறதே என்ற கவலை தூண்ட ...டிவந்தார்!

'வா, சிறைக்கு' என்று அழைப்பு ...ந்தது ஆளவந்தாரிடமிருந்து. பின் ...ங்கவில்லை — இருமல் ஈரல்குலையை ...லுக்கிக் கொண்டேயிருந்தது; எனி...ம் சிறைக்குச்சென்றார்!

திரும்பிவந்ததும் ஊருக்குச் செல்ல பணமில்லாததால் கேட்டு ...ங்கிச்சென்றார் 'இருபது ரூபாய்.' ...தைத்திருப்பியனுப்பும்படி உத்தர...ப் பட்டது, தலைவரால்!

நெஞ்சத்தைக் குலுங்கவைக்கும் ...கழ்ச்சி இது. "உழைத்தேன், ...றிய உன்பேரைச் சொன்னேன், ...ரு நாளும் ஒரு வார்த்தை மறுத்...ரைத்து நானறியேன், அப்படிப் ...ட்ட எனக்கா இந்த நீட்டோலை, ...ண்டிப்புக்கடிதம்!" என்று, எண்ணி ...ருக்கும் அந்த இரும்பு நெஞ்சன் இதயம்!

...வாள் உயிரைப்போக்கும்; வார்த்தைகள் உயிரைச் சித்திரவதை செய்யும்-துண்டு துண்டாகத் துளைத்துப்போடும்!

மறைந்தமாவீரர் வாழ்க்கையில் ஏற்பட்ட சித்திரவதை நிகழ்ச்சிகள் பலவுண்டு.

கடைசிமூச்சுக் காற்றில் கலக்கும் போதுகூட 'கவலை' அவரைவிட்டு விலகவில்லை: 'கஷ்டம்' அவரைத் துக் கொண்டுதானிருந்தது!

கவலை — கஷ்டம் — கடன், அவரது வாழ்க்கையை வதைக்கும் தூதுவர்களாயிருந்தன! மனைவியின் குமுறல், தாயின் சங்கடம், குழந்தைகளின் ஆசை — அத்தனையையும் தாங்கிக் கொண்டு பொதுவாழ்வுப்பாதையில் பெருமிதமாகப் பவனி வந்தார் அவர்!

நடப்பது காட்டுப்பாதை, நச்சுப்பாம்பு, கொட்டுந்தேள், புயல்; முள், கல், எல்லாம் இருக்கும்என்று தெரிந்தும் அவர் அவ்வழிபுகுந்தார் — நடந்தார் — நம்மையும் இட்டுச் சென்றார்!

வசதியான வாழ்வு, இட்ட வேலையைச் செய்ய எடுபிடிகள், எதையும் சாதித்துக்கொள்ளப் பணம்-எனவே எதாவது வேறு வேலை செய்யலாம் என்று இயக்கத்தில் நுழைந்தவரல்ல அவர். பொது வாழ்வு ஒரு பூங்கா — வீட்டில் வெம்மையடிக்கிறது, எனவே வெளியேறிச் சிறிது காலம் அங்கிருப்போம் என்று நினைத்தவரல்ல அவர்.

பொதுச் சேவை ஒரு பாலைவனம், அனல் பறக்கும் காற்று, தணல் கொதிக்கும் மண்வெளி — இது தானே, பரவாயில்லை, நடக்கிறேன்; இலட்சியச் சோலையைக் காண்கிறேன் என்ற வீர மூச்சோடு இருந்தவர்.

சாதியும் பேதமும் நிறைந்த சமுதாயம், அங்கு சனாதனமும் வைதீகமும் செய்யும் கோரத் தாண்டவம், அவர் இதயத்தைக் கசக்கியது; 'என் வேலை அதோ கிடக்கிறது. என் வீடே இந்த நாடு. என் கடமை அதைச் செப்பனிடுவது' என்று கூறிக்கொண்டு தொடங்கினார் — வாலிப காலத்தை வளரும் இயக்கத்திற்கு விருந்தாக்கினார்! அவர் 'வாழ'வில்லை — பலரை வாழச் செய்வதற்காகத் தன் வாழ்வைப் பலியிட்டுக்கொண்டார்.

X X X

புலியினால் பசுவுக்கு நீதி கிடைக்காது, பூனையால் எலி வாழ முடியாது, பணக்காரனால் ஏழை சுகம் பெற்றுவிடமுடியாது-இது அழகிரியின் சித்தாந்தம்.

'பணக்காரன்' — என்ற வார்த்தை அவருக்குப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு. 'நம்பாதே தம்பி! அது நயவஞ்சகப்பாம்பு பணம் தரும் உனக்கு, அதை அமுதென்று நம்பாதே! நஞ்சினால் போச்சு உன்உயிர் — பின் நீ சாயவேண்டியதுதான்!' என்று கூறுவார், "தேவையாகயிருக்கிறதா — வலுவில் வருகிறான், அழைத்துக்கொள். அவனைப்பயன்படுத்து. ஆனால் அவன் உன்னைப்பயன்படுத்தவிட்டுவிடாதே!" என்று போதிப்பார்.

எரிச்சல், அதோடு எச்சரிக்கை இரண்டும் அவருடைய வாழ்வில் இருந்த காரணத்தினால்தான் அவர் 'அஞ்சா நெஞ்சனாக' இருந்து நம் இதயங்களில் அமர்ந்தார்.

பணமோகினிக்குச் சிறிது அவர் இசைந்திருந்தால், அவர் சாதாரண அழகிரியாக மறைந்திருக்க மாட்டார்; ஒரு பணக்காரராக இருந்திருக்கலாம், பணபலத்தின் வசதிகளை அனுபவித்திருக்கலாம் — இன்னும் சில நாட்கள் இந்த உலகிலே உயிரோடு கூட உலவியிருக்கலாம்!

ப...ண...ம்

வா...ழ்...வு

சு...க...ம்

என்ற மூன்று எழுத்துக்களும் அவரை அடிமையாக்கி விடவில்லை, அதற்குப்பதில் க...ட்...சி வெறி அவரைக் கட்டியணைத்துக் கொண்டது — காலமெல்லாம் துணையாக நின்று, அவரைக் கருகிய மலராக்கிவிட்டது.

'ஓட்டைக்குடிசை ஒன்றரைச்சாண் பாய், ஈயம்பித்தளை, தம்பு, தப்பட்டை, தகரக்குவளை'கள் தான் அவரது சகாக்கள் — ஏழைகளின் இதயக்குரல் அவருடைபேச்சு, இல்லாதோரின் ஏழ்மைக் கீதம் அவருடைய சங்கநாதம்!

ஏழையாகவேபிறந்து ஏழையாகவே வாழ்ந்த அந்த இரும்பு நெஞ்சன் ஏழைகள் இயக்கம் — சுயமரியாதை இயக்கம் என்றே எண்ணினார்; சொன்னார்; இருக்கவேண்டுமென்று பாடுபட்டார்!

"பணம் படைத்தோர்நமக்குக்கருவேப்பிலைபோல — நாம் கை யெடுத்துக்கும்பிடும் 'கடவுளாக ஆகிவிடக் கூடாது' என்ற இலட்சியம்கொண்ட அவ்வீரர் தன்வாழ்நாளை அவ்விதமே நடத்தினர், கஷ்டங்களை வருவித்துக்கொண்டார்; என்றும் கண்ணீர் சிந்தியதில்லை, புன்சிரிப்பால் இவை எனக்குக் கிடைக்கவேண்டிய பரிசுகள் என்றே கூறினர்!

* * *

ஏழ்மையும்கொடுமையும்நிறைந்து கிடக்கும் திராவிடச் சமுதாயத்தின் இழிநிலை குறித்துச் சிந்திக்கத் துவங்கி, சுயமரியாதை இயக்கம் கண்ட சிற்பிகளில் அழகிரியும் ஒருவர்.

சமுதாயத்தில் சதிராடும் அறியாமையையும் மூடநம்பிக்கையையும் எதிர்த்துப் போராடக் கிளம்பிய சிலரில், முக்கியத்துவம் வாய்ந்தவர் அழகிரி.

அவர் விரும்பியிருந்தால் தனது "சேவையை" வியாபாரமாக்கியிருக்கலாம், — இன்ப வாழ்வு, ஏராளமான பணம் இவைகளை அனுபவித்திருக்கலாம். இலட்சிய வீரன் அவர், எனவேஇந்தச்சுயநலப்பாதைகள் அவர் கண்ணில் படவில்லை!

தலைவனாகவேண்டும், அல்லது தலைவருக்குச் சமமாக ஆகவேண்டும் என்று எண்ணியிருந்தால், அவர் ஆகியிருக்க முடியும்—ஆக்கியுமிருப்பார்கள் அவரது சகாக்கள்—ஆனல் அவர் அதை விரும்பவில்லை; விடுதலைத்தூதனகவே இருக்க விரும்பினர், வீண்பெருமையும் வேண்டாத புகழும் அவருக்கு வேம்பாக இருந்தன.

சுயமரியாதை இயக்கம்—வளர்ந்த கதை விசித்திரமானது, வேதனைகள் நிறைந்தது. பாமரமக்கள், பணமுதலைகள், பாராள்வோர்—இத்தனை மலைகளையும் ஊடுருவிச் செல்லவேண்டியிருந்தது பகுத்தறிவுப் பாதை. சினம் என்ற காற்றுச் சிற, கல்லடியும் சொல்லடியும் கனவேகத்தில் தாக்க, உற்றார் உறவினரின் 'ஊதாரி இவன் உருப்படமாட்டான்' என்ற ஈட்டிமொழிகள் தாக்க, தத்தித் தவழ்ந்து வளர்ந்தது—வளர்க்கப்பட்டது.

சோகம் நிரம்பிய அச்சோதனைப் பாதையில் வாய்ச்சொல் விளக்காக இருந்தது—அஞ்சாமை, துணிவு ஆகியவைகளே இருளைக் கிழிக்கும் வெளிச்சங்களாயிருந்தன.

வீரமுழக்கம், கேலிப் பேச்சு, கேட்போரைப் பிணிக்கும் சொல்வீச்சு—பகுத்தறிவுப் பணியின் முக்கிய கேடயங்கள். இவைகளைத் தாங்கி எதிரிக் கோட்டையைத் தூள், தூளாக்கி 'கொட்டு முரசு' என்று சிங்காரச் சிந்து தந்த சிலரில் மறைந்த மாவீரரும் ஒருவர்.

நமக்கு தளபதியாயிருந்தார், பணபீடங்களுக்கு அஞ்சா நெஞ்சனயிருந்தார், எண்ணத்தில் தூய்மையில்லாத 'கந்தல் துணிகளுக்கு' அவர் 'பட்டுக் — கோட்டை'யாக இருந்தார்—அத்தகைய வீரரை சாவு நம்மிடமிருந்து பிரித்துச் சென்று ஓராண்டு முடிந்துவிட்டது!

அழகிரியை இழந்து பன்னிரண்டு மாதங்களை நாம் நகர்த்திவிட்டோம்—மாவீரரின் சிங்க உருவம் நம்மிடமில்லை எனினும் அவர் கட்டிவைத்த கட்சிக் கோட்டை 'பட்டுக் கோட்டை'யாக இருக்கிறது! பட்டின் பளபளப்பு, கோட்டையின் உறுதி மாற்றாரின் மனதை இயக்கத்தின் அருகில் இழுத்துக்கொண்டேயுள்ளன! எந்த ஆசையை அவர் இதயத் துடிப்பு அடங்கும் நேரத்தில் அருகிலிருந்தோரிடம் சொன்னரோ, அந்த ஆசை, அவர் மறைந்த ஓராண்டுக்குள் நிறைவேறிவிட்டது—துள்ளிடுங்காளைகள் சுயப்பொறுப் புணர்ந்துவிட்டனர், கட்சிக் கோட்டையின் கருங்கற்களாக ஆகிக் கொண்டிருக்கின்றனர்!

கட்டுப்பாடும், ஒற்றுமையும் இயக்கத்தின் ஜீவநாடி என்ற ஆசை இன்று நனவாகிவிட்டது—திராவிட முன்னேற்றக் கழக உருவில் வளர்ந்து வருகிறது!

அஞ்சா நெஞ்சன் அழகிரி மனித சமுதாயத்திலே ஒரு ஆள் எனினும் பரந்த கடலிலே பாதை தவறி வீழ்ந்து வேதனை பட்டோரைக் கரையேற்றப் பாடுபட்ட ஒரு கப்பல்!

சமுதாயம் — ஒரு சமுத்திரம்! அதற்குள்தான் எத்தனை கோரங்கள்—அதோ, பல் நீட்டிப் பாய்ந்து வரும் சுறு, அதை வேகமாக இழுத்துவரும் பேரலை, அதன் சுழற்சி, தாங்காது சிக்கித் திண்டாடும் படகு, அதைக் கரை நோக்கிச் செலுத்தப் பாடுபடும் பரதவர்!

விசித்திரம் நிரம்பிய காட்சிகள், சமுதாயச் சமுத்திரத்தில் நாம் காண்பவை. இன்பதுன்பம் என்ற அலைகள், அதைத் தாண்டிக் கரையேறத் தவிக்கும் மனிதன்; மேலே வெண்ணிற ஆடை; இதயத்திலே இருட்டு! ஏழையென்ற சிறுமீன், அதைத் தின்று தன் வயிறை நிரப்பத் தாவும் பணக்காரத் திமிங்கிலம்!

சமுத்திரத்தில் தான் பலநிறமுள்ளமீன்வகைகள் என்பதல்ல; சமுதாயத்திலும் நிற பேதம் கொண்ட மனித ஜாதி! வேதனையும் சோதனையும் நிறைந்த சமுதாயத்தைச் சீர்திருத்தப் பாடுபட்டவர் அவர்—பரந்த சமுதாயச் சமுத்திரத்தில் அவர் ஒரு சிறு படகு எனினும் அவரது சேவை மனித ஜாதியின் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தருவது—மகிழ்ச்சியைத் தூண்டுவது!

அதோ, கொடியிலே முல்லை கூத்தாடுகிறது முழு இதழ் விரித்து. நேற்று அது அரும்பு; நாளையோ அதன் அழகு இதழ்கள் குவிந்துவிடும், கவனிப்பாரற்றுவாடிஉலர்ந்து காற்றில் சிதறிவிடும்!

மனித வாழ்வும் மலர்க்குலம் போன்றதுதான். பிறக்கிறன்—வாழ்கிறன்—சாகிறன்! இந்த இடைக்காலத்திற்குள் எத்தனை எத்தனை வம்புகள் — வீம்புகள்—கீழ் ஜாதி மேல்ஜாதிச் சண்டை, வெட்டு, குத்து, கொலை......வாழப்பிறந்த மனித சமுதாயத்தில் பேதமும் பிளவும் படுத்திவைக்கும் பாடு—கொடுமைகள் நிறைந்தது! மடைமையின் விளைவாக எழும்பும் இக்கொடுமைகளைக் களைந்து 'எல்லோரும் ஓர் குலம்' என்ற கொள்கையைக் கண்டு அதன் வழியில் தனது கூட்டத்தாரை இட்டுச் செல்லப் பாடுபட்டவர் அவர்.

நேற்று, இன்று, நாளை...உலகச் சக்கரம் உருண்டுகொண்டிருக்கிறது! நேற்று மலர்ந்த மலர் இன்றில்லை, முன்பு கண்ட காட்சிகள் இப்போதில்லை! வாள் இருந்த கைகளில் துப்பாக்கி; கால்களுக்குப் பதில் கார்; விரைவாகச் செல்ல விமானம்! கால ஓட்டம் மனித சமுதாயத்தின்

றுமலர்ச்சித் தோட்டத்தைப் துப்பித்துக் கொண்டே இருக்கின் து! புதுப் புது எண்ணங்கள், த்தம் புதிய காட்சிகள், நாள்தோ ம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின் ன. புத்தியுள்ள மனிதன் காலத் தாடு போட்டியிடுகிறான், வெற்றி ருதுகளைப் பெறுகிறான், விஞ்ஞா த்தால் காலத்தையும் வெல்கிறான்!

காலம்—வெகு வேகமாக ஓடிக் காண்டிருக்கிறது; அதோடு டவே மனித சமுதாயம் ஓட ல்லை! பின்தங்கிக் கிடக்கிறது— னிப்பாரில்லாததால்; 'கடவுள் சயல், காப்பாற்றுவார் அவர், நம் ல் என்ன ஆகும்' என்ற பழைய சி மூடிக் கிடப்பதால்! விதி— வுள் — மதம், இவை மனிதன் ட்டுமிராண்டியாகக் கானகங் லே திரிந்தபோது ஏற்படா வை. மனிதன் அறிவு பெற்று ழ முற்பட்ட இடைக்காலத்திலே முளைத்தவை. கடவுளை—மனிதன் ன் சிருஷ்டித்தான். மக்கள் கூட் த்தை மருட்டி விரட்டித் தன் ஏவ க்குக் காத்துக் கிடக்க, வல்லான் ருவன் வகுத்த தந்திர மார்க்கங் ளே விதி—மதம்—கடவுள்!

மறுமலர்ச்சிக் கருத்தைத் மிழகத்திலே பரவவிடப் பாடுபட் ர் அழகிரி. விதியென்பது மக்களை ாய்க்கச் செய்யும் ஒரு சதி, தம் மக்களைச் சித்திரவதை சய்விக்கும் பலிபீடம், கடவுள் — ரு கற்பனை, என்ற உண்மைகளை ரெல்லாம் அலைந்து திரிந்து சான்னார்; உழைத்தார், தனக்காக ல்ல, மக்களின் நல்வாழ்விற்காக!

பணத் திமிங்கிலங்கள், மதப் டம், விதிவிலக்கு, கடவுள் கற்பனை இத்தனையையும் எதிர்த்துப் பாராடினார், போராடும் படையை ண்டாக்க உழைத்தார், வெற்றி ண்டார்!

கண்ணுக்கெட்டாதபடி பரந்து டக்கிறது வானம், அங்கு இறகு டித்து எதேச்சையாகப் பறந்து ரிகிறது வானம்பாடி — இதுதான் பாதுச் சேவை புகுந்தவர்களின் லை.

பரந்த உலகில், வாழப்பிறந்த னிதக் கூட்டம் வழி தவறியதைக் ண்டு, புறப்படுகின்றனர் சிலர் பாதுநலத் தொண்டர்களாக — ம்பக் கவலை, குழந்தையின் மழலை, வறுமையின் கொடுமை, வாழ்வின் தொல்லை இத்தனையையும் மீறி 'வானம்பாடி'களாக உலவுகிறார்கள், வாழ்க்கையின் கவலைகளைக் கவனிக்காது பறந்து திரிகிறார்கள்!

சுகவாழ்வைப்பலியிட்டுக்கொண்டு பொதுவாழ்வில் குதிக்கும் தொண்டர்களின் வாழ்வு, பாலைவனத்தில் சிக்கிய பசு போன்றதாகும்.

இலட்சியத்துக்காகச் செலவழிக்கும் நேரத்தை, தன் இன்ப வாழ்வை எண்ணி பயன்படுத்தி, வாழ்ந்து தன்வாழ்க்கையை முடித்துக்கொண்டு போய்விடலாம்!

ஆறும், மேடும் காடும், கழனியும், உழைக்க இடமும், உழைப்பைப் பெற்றுப் பணம் கொடுக்கும் முதலாளிகளும் நிறைந்து கிடக்கும் உலகில்— இது கஷ்டமானதல்ல!

எனினும் பொதுச் சேவை புரிகிறான் — மக்களைப்பார்த்து, அவர்களின் நிலைமைகளைக் கண்டு மனம் புழுங்கி, இன்னல்களிலிருந்து இவர்களை விடுவிக்க ஏன் நான் ஈடுபடக் கூடாது என்ற கேள்வி வெடிக்க, அவன் தன்னைச் சமுதாயத்தின் தொண்டனாக ஆக்கிக்கொள்கிறான்.

பொது வாழ்வுக்காகத் தன்னை அடிமைப் படுத்திக்கொண்ட அவனுக்கு மக்கள்மன்றத்தில்செல்வாக்கு ஏற்படலாம்—மாலை, வாழ்க' முழக்கம், மரியாதை எல்லாம் கிடைக்கும்! உழைப்புக்கு ஊராரின் பாராட்டுதல்கள் கிடைக்கும்!

ஆனால், அவனது சுயவாழ்வில் புயல் வீசும். வெளியே வீரமுழக்கம் செய்பவன்—வீட்டிலே குமுறல் எழுப்பிக்கொண்டிருக்கும்!

பணப்படைத்தோருக்குப்பொதுச் சேவை ஒரு நிலாச்சோறு—ஒரு வகையில் ஓய்வு நேர வேலை! ஆனால் ஏழையின் மத்தியிலிருந்து எழும்பும் பொதுத்தொண்டனுக்கு அது ஒரு புயல், சுட்டெரிக்கும் நெருப்பு சுகம் தராத சோலை!

அழகிரி ஏழையின் மத்தியிலிருந்து எழும்பியவர், ஏழைகளின் இயக்கமான சுயமரியாதை இயக்கத்தில் இருந்தவர், பணவீச்சின் பயமுறுத்தல்களுக்கு அஞ்சாதவராகயிருந்தவர். எனவே அவரது வாழ்வு தாமரையிலைத் தண்ணீராக இருந்தது!

பகுத்தறிவுப் பாசறை உருவான காலமுதல் இன்று வரை ஒரு கூட்டுக் குடும்பம். அண்ணன், தம்பி, அத்தான் சுயமரியாதைச் சூரர்களின் அழைப்புக் குரல்கள் இவை! யாவரும் ஓர் குடும்பத்தார், தங்கள் கூட்டுக்குடும்பமே கட்சியென்று கவலையும் கருத்தும் கொண்டு கிடந்தனர். ஆகவே தான் சனாதனக் கோட்டையை அந்த 'தர்பு, தப்பட்டை, சுயப் பித்தளை'கள் தகர்த்துப் புகமுடிந்தது!

சகோதர மனப்பான்மையும், தங்கள் இயக்கத்தவர் எல்லோரும ஓரே குடும்பத்தவர் என்ற ஒற்றுமை மனப்பான்மையும், சுயமரியாதைத் துவக்ககாலத்தில வளர்ந்ததால், முன்னோடும் தூதுவர்களாக இருந்த பலருடைய வாழ்வு—வெம்பிப்போயிற்று, கசங்கிய மலராயிற்று! வெம்பிய அந்த வீரர்களின் சேவை, கூட்டுக் குடும்பமெனப்பணியாற்றிய அவர்களின் தியாகம், கட்சிக் கோட்டையின்—அந்தத்தியாக மணிகளின் சித்திரங்கள் கோட்டைச்சுவர்களில் தீட்டப்படவில்லை—நினைவுச் சின்னங்கள் ஏற்படவில்லை!

இயக்கத்தை வளர்க்கும் தொண்டர்கள் அவர்கள் என்ற எண்ணம் எழும்பவில்லை. 'ஏதோ, இப்பரந்த உலகில் இடமில்லாது கட்சிக்குள் தனக்காக உழைக்க வந்தவர்கள்' என்றசூதுமதி, எப்படியோ ஏற்பட்டு விட்ட காரணத்தால் சுயமரியாதை இயக்கத்தின் துவக்க கால வீரர்கள் பலருடைய வாழ்வு — வேதனையில் வீழ்ந்து, அவிந்துபோயிற்று!

"இருபது ரூபாய்களுக்காக" ஏச்சும் பேச்சும் பெற்ற ஏழை அழகிரியின் அந்தியகாலமும், புயலில் சிக்கிப படகாயிற்று-திக்கித் தவித்தது! இலட்சியமே பெரிதென வாழ்ந்த அவ்வீரர் மறைந்து ஓராண்டு ஓடிப் போய்விட்டது. இந்த ஓராண்டில், இயக்க வரலாற்றில் ஏற்பட்ட சம்பவங்கள் சாதாரணமானதல்ல— ஒரு புது மறுமலர்ச்சி அத்தியாயமே உருவாகியிருக்கிறது.

அழகிரியின் வாழ்க்கை பொதுச் சேவை புகுந்தவர்களுக்கோர் புத்தகம். இலட்சிய வீரராக இருந்த அவருடைய வாழ்க்கையில எதிர்பாராது

(அடுத்த பக்கத்தில்)

# ஏன் இது?

"கருணை செய், எம்பாவாய்" என்று கணவன் கெஞ்சினான்! அவள் கையை விரித்தாள், 'ஏது இங்கே, இல்லை, போகச் சொல்லுங்கள்!' என்று பதில் கூறினாள்! அவன் சம்பாதித்துக்கொண்டு வந்து சகலவிதமான பொருள்களையும் போடுபவன்—அதைக்கொண்டு சமைத்துச் சாப்பாடு தயார் செய்வதுதான் அவள் வேலை!

சம்பாதித்து வருபவன் கையேந்தினான்-நண்பன் ஒருவனை அழைத்து வந்துவிட்டேன், அவனுக்கு உணவளிக்கவேண்டும் என்று வேண்டினான்! அவளோ-மறுத்துவிட்டாள், ஏது இங்கே, இல்லையே, என் செய்வேன் என்று முகாரி பாடிவிட்டாள்!

கணவன் பாடு கஷ்டமாகிவிட்டது, விருந்தாளியைப் பார்த்தான். "அழைத்து வந்துவிட்டோம், எப்படியும் அவருக்குச் சாப்பாடு போடவேண்டும். இல்லாவிட்டால் ஏசலும் பேச்சும் எழும்புமே" என்ற எண்ணங்கள் அவன் இதயத்தை அரிக்கலாயின. 'வாருங்கள், போவோம்' எங்கேயாவது சாப்பாடு கிடைக்கிறதா என்று பார்ப்போம்'—என்று கூறி அவனை அழைத்துக்கொண்டு வீடு வீடாகச் சென்று 'இருக்கிறதா, சாப்பாடு' என்று கதவைத் தட்ட ஆரம்பித்தான்!

X X X

வேடிக்கையான கதை இது, சொந்த வீட்டில் சோறில்லையென்றால், அதற்காக வந்த விருந்தாளியை அழைத்துக்கொண்டு பிச்சையெடுப்பதா, உணர்வுள்ளவனா அவன், உன்மத்தனோ அல்லது உலக விபரமே தெரியாதவனோ என்ற கேள்விகள் எழும்பலாம். கதா நாயகன் ஒரு சாதாரண ஆளல்ல—ஒரு மாகாணத்தை ஆளும் அரசாங்கம்!

அன்பர் அவினாசிலிங்கம் கல்வியமைச்சராக இருந்த காலத்தில், தமிழில் ஒரு கலைக் களஞ்சியம் தயாரிப்பதெனத் திட்டமிடப்பட்டுஅதற்கென ஒரு கமிட்டியும் நியமித்து, அது சம்பந்தமான அலுவல்கள் நடைபெற்றும் வருகின்றன.

பல பொருள் குறித்தும் விஷயங்களைச் சேகரித்து, அவைகள் மக்கள் இலகுவாக அறிந்து கொள்ளும்படி செய்யவேண்டும் என்ற ஆசையோடு இந்த ஏற்பாடு செய்யப்பட்டது, சர்க்காரால்.

வேலையும் துவக்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. அண்மையில் மேற்படி கலைக்களஞ்சியக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றபோது, ஒரு முடிவு செய்திருக்கிறார்கள்.

முன்னாள் அமைச்சர் அவினாசிலிங்கம்தான் தலைமை வகித்திருக்கிறார். கூட்டத்தில் செய்யப்பட்டிருக்கும் முடிவைக் கண்டபோதுதான், நமக்கு, தலைப்பில் தந்த கதை, நினைவுக்கு வந்தது.

கலைக் களஞ்சியம்—ஒரு அறிவுச் சொத்து, தமிழ் மொழியில் இதுவரை இல்லாதது. புது முயற்சி—அவினாசிலிங்கம் அமைச்சராக இருந்த காலத்தில் சென்னை சர்க்கார், தமிழில் கலைக் களஞ்சியம் காணவேண்டுமென்ற ஆசையுடன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

இந்திய சர்க்காருக்கும் எழுதினர், ஏராளமான பணம் தேவைப்படுகிறது, எனவே மத்திய சர்க்கார் மகத்தான இப்புது முயற்சிக்கு உதவி தரவேண்டும் என்று கோரினர். மத்திய சர்க்காரும் மறுக்கவில்லை!—தருவதாக ஒப்புக்கொண்டது.

ஆனால், இப்போது தர மறுத்துவிட்டதாம்!—சஞ்சலத்துடன் இத்தகவல் வெளிவந்திருக்கிறது.

கலைக்களஞ்சியப் பணிக்குத் தேவைப்படும் தொகை 12 இலட்சம் ரூபாய். இந்தப் பெரும் முயற்சிக்கு இந்திய சர்க்கார் உதவுவதாகச் சொன்ன தொகை — தேவைப்படுகிற தொகையில் பாதிபங்குகூட அல்ல, கால்பகுதிகூட அல்ல!

**75,000** ரூபாய் தருவதாகச் சம்மதித்திருந்தார்களாம் — பன்னிரண்டு இலட்சம் தேவைப்படும் ஒரு அரிய பணிக்கு முக்கால் இலட்சம் தருவதாக உறுதி கூறியிருந்தார்களாம்!

ஆனால், இப்போது அத்தொகையையும் தருவதற்கு வசதியில்லை என்று தகவல் வந்திருக்கிறது. பணமில்லை, எனவே பாருங்கள் வேறு வழியை என்று இப்பாரத உபகண்டத்தை ஆளும் அரசாங்கம் பதிலனுப்பியிருக்கிறது.

நண்பனை அழைத்து வந்துவிட்டேன் என்று மனைவியிடம் பல்லிளிக்க, 'இல்லை. வேறு வழிபார்' என்று மனைவி வெகுண்டுரைத்ததுபோ...

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட இடி, மின்னல், எல்லாம் அவரைக் கலக்கவில்லை. இறுதிவரை இயக்கமே என்மூச்சு என்று வாழ்ந்தார்—நமது இளம் இதயங்களெல்லாம் நிறைந்தார்.

சாவு, பிறப்பின் மறுமுனை! உலகில் எத்தனையோ உயிர்கள் பிறக்கின்றன, வாழ்கின்றன, முடிவில் இறக்கின்றன. அழகிரி மறைந்துவிட்டார். அவர் நம்மிடையில்லையென்றாலும், அவரது சிங்க உருவம் அருகே இல்லையென்றாலும், அவருடைய நினைவு நமதியக்கம் உள்ளவரையும் நீங்காது; மறையாது!

பொதுச்சேவையில்புகுந்தவன் எந்த வெற்றியைக்காணவேண்டுமோ அதை அவர் பெற்றுவிட்டார். அவர்எடுத்த காரியங்களை முடிக்கும் படை—நாம் இருக்கிறோம்! அவரது இலட்சியங்களைச் சாதிக்கும் இளம் வீரர்கள் இருக்கிறோம்! அவரது தன்னலமற்ற பொதுப்பாதை, நமதுபாதை! களங்கமற்ற கட்சிவாழ்வு, நமது இலட்சியம்!

மத்திய சர்க்காரிடமிருந்து பதில் கிடைத்திருக்கிறது.

மாகாணங்கள் என்ற தூண்களின் மீது கட்டப்பட்டிருப்பதே மத்திய சர்க்கார். அதன் வாழ்க்கைக்கான வருமானங்கள்—ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும்தான் செல்லுகின்றன.

கலைக் களஞ்சிய முயற்சி புதியது, மக்களுக்கு அவசியமானது. தமிழில் இதுவரையில்லாதது, எல்லோருக்கும் பயன்படக் கூடியது. எனவேதான் மாகாண சர்க்கார் இந்த முயற்சியிலீடுபட்டு சிரத்தை காட்டினார்கள்—செய்து முடிக்கவேண்டும் என்ற ஆவலோடு திட்டம் போட்டு, வேலை செய்து வருகிறார்கள்.

மக்களுக்கு நன்மை பயக்கும் ஒரு புதுச் செயலில் மாகாண சர்க்கார் ஆர்வம் காட்டுகிறது. அதை நிறைவேற ஆவன செய்துதரவேண்டிய தலைமைப்பீடமோ—இந்திய அரசாங்கமோ—இல்லை பணம் என்று, கைவிரிக்கிறது!

ரூபாய் 75000-தர இயலவில்லையென்று மத்திய சர்க்கார் அனுப்பியிருக்கும் தகவலைக் கண்டால் பச்சாதாபமும் பரிவும் ஏற்படலாம்—என்ன செய்வார்கள், எதைத்தான் சமாளிப்பார்கள், எவ்வளவோ தொல்லைகள் நெருக்கடிகள்! எனவேதான், இச்சிறு தொகையைக்கூட அளிக்க முடியாமல் கைவிரித்திருக்கிறார்கள்—என்ற எண்ணம் பலருக்கு எழும்பக்கூடும்!

மத்திய சர்க்கார் சுகபோக நிலையில் இருப்பதாக நாமும் கூறவில்லை—அது சுழலில் சிக்கிய படகாகத்தானிருக்கிறது.

பற்பல நெருக்கடிகள், பணமில்லாததால் ஏற்படும் சங்கடங்கள் இந்திய சர்க்காரை ஆட்டி அசைப்பதாகத் தகவல்கள் அடிக்கடி கிடைத்தவண்ணம்தான் உள்ளன.

நிதி மந்திரி முதல், பிரதம மந்திரி வரை பேசும்போதெல்லாம் பஞ்சநாதம் எழுப்பிக்கொண்டுதானிருக்கின்றனர்—இல்லை! இல்லை!! என் செய்வோம் என்ற ஏக்கக்குரல், அடிக்கடி அவர்கள் பிரசங்கங்களில் எதிரொலித்தவண்ணம்தான் உள்ளன.

கணவன், அழைத்துவந்த விருந்தாளிக்கு சோறு கேட்க, இல்லையென்று மறுத்த மனைவி—சிறிது நேரத்துக்கெல்லாம் பக்கத்து வீட்டு பார்வதியையழைத்து, 'இந்தா இதை எடுத்துக்கொண்டுபோ' என்று பலர் சாப்பிடக்கூடிய உணவைக் கொட்டிக்கொடுத்தால், பார்ப்போருக்கு எப்படியிருக்கும்!

கணவன் கேட்டான் இல்லையென்று கைவிரித்த இக்காரிகை, இப்போது எவளுக்கோ இவ்வளவு சோறு கொடுக்கிறாளே—என்று கேட்கத்தான் தோன்றும்!

இந்திய சர்க்கார் கடன் கொடுக்கப்போகிறதாம்—பக்கத்திலேயிருக்கும் பர்மாவுக்கு!

ரூ. 75,000 இல்லையென்று கை விரித்த இந்திய அரசாங்கம் கடன் தரப்போகிறதாம்—1-33 கோடி ரூபாய்கள் கடன் தரப்போகிறதாம்!!

பத்து இலட்சம் பவுன்கள்!—கிட்டத்தட்ட ஒன்றரைக்கோடி ரூபாய்களை உதவப்போகிறதாம்! உதவும் தொகைக்கு வட்டியுங்கிடையாதாம்!

கலைக்களஞ்சியக் கமிட்டியினர், மத்தியசர்க்கார் மறுத்துவிட்டது, என்று கண்ணீர்சிந்தி கவலையைத் தெரிவித்திருக்கும் 25ந் தேதியன்றே இத்தகவல் வந்திருக்கிறது—புது டெல்லியிலிருந்து! சென்னையில் காவடிச்சிந்து பாடியிருக்கிறார்கள்—புது டெல்லியிலிருந்து மோகனச்சிந்து புறப்பட்டிருக்கிறது!

இந்தியசர்க்கார், எதற்கெடுத்தாலும் பணமில்லையென்று முகாரி எழுப்பும் மத்திய அரசாங்கம், கடன் கொடுக்கப்போகிறதாம்!

பிச்சையெடுக்கும்பச்சை, தெருச் சுற்றும் பிச்சைக்கு "பாலசோறு" தரப்போவதாகச் செய்தி வந்தால எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது, நமக்கு!

கல்வித்துறை வளர, சுகாதாரச் செலவுக்கு, அடிப்படைத் தேவைகளுக்குப் 'பணமில்லை'யென்று பஞ்சநாதம்எழுப்பும் இந்திய சர்க்கார், பர்மாவுக்குக் கடன்தரப்போகிறதாம்.

வேடிக்கையான செய்தி — எனினும் வெளிவந்திருக்கிறது.

X X X

பர்மா—உள்நாட்டுப் போரில் சிக்கிச்சீரழிந்துகொண்டிருக்கிறது. வெள்ளையுடையினர் கிளர்ச்சி, கரீனியரின்போர், கம்யூனிஸ்டுகளின் கலவரம்—பர்மா திண்டாடிக்கொண்டிருக்கிறது.

ஆசியாவில் வளர்ந்துவரும் கம்யூனிசக்கொள்கைகள் பர்மாவிலும்எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன.

ஆங்கிலேயப் பிடியிலிருந்து விடுபட்ட நாள்முதல் பர்மிய சுதந்திர சர்க்காரும் நாட்டைக்காட்டுப்பாதையிலேயே நடத்திச் செல்கின்றனர்.

அமெரிக்காவின் உதவி, பிரிட்டனின் பிரியமொழி, இவைகளுடன் தத்தித்தவழ்ந்து வரும் பர்மிய நாடு, தன்னை எதிர்நோக்கும் பிரச்னைகளிலிருந்து தப்பமுடியாது தத்தளித்து நிற்கிறது.

ஏழ்மையும், இல்லாமையும், நிர்வாகச்சீர்குலைவும், உள்நாட்டுப் போரும் கம்யூனிச வளர்ச்சிக்குக் காரணங்களாகிவிட்டன.

போர் — கலவரம், இவைகளைச் சமாளிக்கவேண்டியதிலை—பர்மாவைப் பணமில்லா நாடாக ஆக்கிவருகிறது.

ஆசியா, "சிவப்பு வலை"க்குள் வீழ்ந்துகொண்டிருப்பதைக்காணும் முதலாளித்துவ நாடுகளின் முக்கியத்துவவர்களான அமெரிக்காவும், பிரிட்டனும், 'பர்மாவைக் காப்பாற்றுவதாகப் பறைசாற்றி வருகின்றன. சீனவுக்குப்பின் பர்மா — சிவப்பாகிவிடுமோ என்ற பயத்தால், பர்மாவைக் கம்யூனிச வளர்ச்சியிலிருந்து காப்பாற்றத் திட்டங்கள் தீட்டிக் கொண்டிருக்கின்றன. இத்திட்டங்களில் ஒன்றையே இப்போது பிரிட்டன் நடைமுறைக்குக் கொண்டுவர முடிவு செய்திருக்கிறது.

காமன் வெல்த் நாடுகள் பர்மாவுக்குப் பணங்கொடுக்கும். இரண்டு ஆண்டுகளுக்கு என்று எட்டுகோடி ரூபாய் கடனைகத் தரப்படும். இத்தொகைக்குவட்டிகிடையாது. காமன் வெல்த் நாடுகளில் ஒன்றான இந்தியாவின் பங்கு 1.33-கோடிரூபாய்கள்.

பர்மா-பக்கத்து நாடு, அதன் நல்வாழ்வில் அக்கறையும் அன்பும் இருக்கத்தான் வேண்டும். அதற்காகத்தன்வீடு சாப்பாடில்லாமல் தத்தளிக்கும்போது, இருக்கும் அரிசியை இன்னொருத்தருக்குக் கொட்டிக் கொடுத்தால்—விவேகம் உள்ள செயலென்று எவரும் கூறார்.

(10-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 2—4—50 [காஞ்சி


## ஞானோதயம்

★

"அமெரிக்காவை நம்பினால் பல னில்லை, பிரிட்டனை நம்பினாலும் பிரயோஜனம் உண்டு."

என்று இந்திய சட்டசபையில் அவர் அறிவித்திருக்கிறார்.

"அமெரிக்காவிலேயே மூலதனப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது"

"அருகிலுள்ள நாடுகளில் அமெரிக்க முதலாளிகள் பணம்போடுவார்களேயொழிய இவ்வளவு தூரத்திலிருக்கும் இந்தியாவை விரும்பமாட்டார்கள்"

"நம்புவதால்பலனேற்படாது ஏன் வீண்கடன் நமக்கு? விரிவான திட்டங்களைப் போட்டுக்கொண்டு பணமில்லையென்று வெளிநாடுகளிலிருந்து வட்டிக்குப் பணம் ஏன் வாங்கவேண்டும். பின் அது தாங்கமுடியாதசுமையாகவல்லவா ஆகிவிடும்?" இவ்விதம் அவர் பேசியிருக்கிறார். அமெரிக்காவிலிருந்து மூலதனம்கிடைக்குமென எதிர்பார்ப்பதில் பலனில்லையென்பதாக அறிவித்துவிட்டு, மேலும் அவர் கூறுகிறார்.

"பிரிட்டன் கஷ்டநிலையில்தானிருக்கிறது. எனினும் அங்கு மிஞ்சும் தொகை இந்த புதுத்தொழில்களுக்குப்பயன்படமுடியும். அமெரிக்காவிலிருந்து மூலதனம் வருவதைவிடப் பிரிட்டனிலிருந்து எளிதில் நமக்குப் பணம் கிடைக்கும் ஏனெனில் பிரிட்டிஷ் முதலாளிகள் நம்மை நன்கு அறிந்தவர்கள்—நமது நாட்டையும் நன்கு புரிந்தவர்கள். எனவே, எனது நம்பிக்கை அமெரிக்காவிடமில்லை — பிரிட்டனிடம்தான் பதிகிறது!"

நிதி அமைச்சர் ஜான்மத்தாய் தகவல் இது.

X X X

"எதிர்பார்க்கிறோம், என்னென்ன உறுதி மொழிகள் கேட்கிறீர்களோ அவைகளையெல்லாம் தருகிறோம்."

"கம்யூனிசம் இதோ வளர்ந்து கொண்டுவருகிறது—பாரீர்! இதைத் தடுக்க நீர்தானே வழி காட்டவேண்டும் வாரீர்!"

"நான்வரவேண்டுமா! ஆட்சேபனையென்ன? வருகிறேன் — நமது நல்லுறவு ஸ்தாபிதமாக வேண்டுமென்பதுதானே எனது எண்ணம்!"

ஆசை வார்த்தைகள், அனுதாபச்சகர் நீங்கள்தான் என்ற அபாய அறிவிப்புகள், நேசத்தூது எல்லாம் நடத்தப் பட்டது. விஜயலட்சுமியார்—இந்தியப் பிரதிநிதி—விருந்துகளுக்குச் சென்றபோதெல்லாம்கூறினார், 'அமெரிக்க—இந்திய உறவு' அதிகமாகிக்கொண்டு வருவதாக!

நேரு விஜயம் செய்தார் – தனது நாட்டுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு பற்றிப் பேசினார், 'அமெரிக்காவைக் கண்டேன்' என்று ஆனந்தமாகப் பேசினார்!

இப்போது அவரது மந்திரிசபை சகா, மத்தாய் அறிவிக்கிறார் 'அமெரிக்காவிடமிருந்து மூலதனம் கிடைக்குமென்பதில்' நம்பிக்கையில்லையாம்' நிதி மந்திரியார் கெட்டிக்காரர்தான்—இல்லையெனில் இத்தந்திரப் பேச்சு எப்படிக் கிளம்பியிருக்கும்!

அமெரிக்க முதலாளித்துவம் ஏராளமான பணத்தைக் கொண்டு வந்து போடும் என்று இந்திய ஆளவந்தார் எதிர்பார்த்தனர்! வேண்டுகோள்—விஜயம்—விளக்கம் எல்லாம் விடுத்தனர். அமெரிக்காவுக்கும்—இந்தியாவுக்கு மிடையே புது உறவும் புது வாழ்வும் பூத்திருப்பதாகப் பேசப்பட்டது!

ஆனால் எதிர்பார்த்தபடி பலன் கிட்டவில்லை—எண்ணியது போல அமெரிக்காவிலிருந்து பணம் வந்துவிடவில்லை — அமெரிக்க முதலாளிகள் பணத்தைக் கொண்டுவந்து தொழில்களை ஆரம்பியுங்கள் என்று தூண்டவில்லை!

அவர்கள் காலத்தைக் கணித்துக் கொண்டிருக்கிறார்கள். கஷ்டம் அதிகரிக்க அதிகரிக்க, தங்கள்காலப்புயல் வந்து விழும் சமயம் நேரும். அந்த நேரம் வரட்டும் என்று காத்திருக்கிறார்கள்!

இந்திய சர்க்காரின் 'இக்கட்டான
நிலை, அவர்கள் அறியாததல்ல!

வெளிநாட்டு மூலதனத்தை வர
வேற்கிறோம் என்று இவர்கள்
அறிக்கை விட்டார்கள் — வருக
வருக என்று வரவேற்புரை தயாரித்
தார்கள்!

அமெரிக்க முதலாளித்துவம் நிப
தனைகளைக் கேட்டது, 'திட்டமான
கொள்கை உங்களிடமில்லையே. எதை
நம்பிப் பணம் போடுவது?-போட்டுக்
கொஞ்சநாட்களுக்கெல்லாம், தொழி
லாலைகளைத் தேசிய மயமாக்கிவிட்
டால் என்செய்வது!" என்று கேள்வி
களைக் கேட்டார்கள்.

பகிரங்கப் பிரகடனங்கள், பிரசு
ரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டது
"இன்னும் பத்து ஆண்டுகளுக்கு
தேசியமயமாக்கும் திட்டம் கிடை
யாது" என்பதாக!

இருந்தும் பணம் வரவில்லை—
அவர்கள் ஆழம்பார்த்துக்கொண்டே
இருக்கிறார்கள்!

வரும், வருமென்று காத்திருந்து
சலித்துப்போன காதலனாகியிருக்
கிறார் — நிதிமந்திரியார்! அமெரிக்கா
வுக்கு எச்சரிக்கை விடுவதுபோல
அறிவிக்கிறார்."எதிர்பார்த்து நிற்கு
என்னை ஏமாற்றிவிட்டாய், அக
காரம் அவ்வளவு வந்துவிட்ட
உனக்கு! — நான்மட்டும் என்
சளைத்தவனோ, நீ போனால் இ
னொன்றைப் பார்த்துக்கொள்கு
றேன். உன் அழகு எனக்குத் தெ
யாதோ" என்று பாசாங்குசெய்
பலன் கிடைக்கும் என்று முடி
செய்தவர்களைப்போல, இவர், இ
போது பேசியிருக்கிறார். அமெரிக்
விலும் மூலதன நெருக்கடியாம்.

இந்தியாவில் வியாபார அனு
இல்லாததால் பணம்போடப் ப
படுகிறார்களாம்.

எனவே, பிரிட்டன் கஷ்டப்
டாலும் அங்கிருந்து மூலதனத்
எதிர்பார்க்கலாமாம்.

இந்த 'ஞானோதயம்' ஏற்பட்டு
கிறது இவருக்கு — அதுவும் இ
போது!

இத்தனைநாள் இந்த உண்மை
இவர்கண்ணில் படவில்லைப்போலு

X X X

அமெரிக்க முதலாளித்துவம்
ஒரு ஆடும் பாம்பு என்று

அடிக்கடி கூறிவருகிறோம். ஆசை காட்டி அதை அணைக்காதீர்—அது ஆபத்து என்று எச்சரித்து வருகிறோம்.

வெளிநாட்டானை விரட்டிய வீரர்கள் நீங்கள்—உங்கள் ஆட்சி மீண்டும் அந்நிய ஆதிபத்தியத்துக்கு 'பாக்கு'க் கூறக் கூடாது — அது பலன் தராது; படுமோசம் விளைவிக்கும் என்று கூறி வருகிறோம்.

நாட்டை அமெரிக்க ஆதிபத்தியத்துக்கு அடிமையாக்கிவிடாதீர் — பின், அடங்கி ஒடுங்கி வாழும் நிலை ஏற்பட்டுவிடும். வேண்டாம் இந்த வீண் யோசனை—என்று எச்சரித்து வருகிறோம்.

இந்தியா தன் சுய தேவைக்கான வசதிகளையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொள்ள முடியும், கொஞ்சம் புத்தி சாதுர்யமும் முதலாளிகளை மிரட்டும் மனோபாவமும் மட்டும் ஏற்பட்டால் போதும் — என்பதாகப் பலமுறை விளக்கங்கள் தந்து வருகிறோம்.

இத்தனையும் எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுகள் என்ற கருத்துடன் புறக்கணிக்கப்பட்டன. சீற்றமும் சிந்தாகூலமுமே ஏற்பட்டது, பல தேசிய நண்பர்களுக்கு.

இப்போது ஜான்மத்தாய், இந்திய ஆட்சியின் பொக்கிஷ மந்திரி வெளியிடுகிறார், 'அமெரிக்காவிடம் உதவி பெறுவது இயலாது — பலிக்காது' என்பதாக!

வெளி நாடுகளுக்குப்பணம்உதவி, பிற்போக்கு நாடுகளின் முன்னேற்றத்தில் அக்கரை காட்டப்போவதாக அமெரிக்கா அடிக்கடி பேசி வருகிறது.

பேச்சில் தேன் — செயலில் ஒன்றுமே இல்லை!

காரணம் விளக்கவேண்டியதில்லை—இலாபமும், போட்ட முதலுக்கான வேட்டையும் கிடைக்குமா என்பதில் அமெரிக்கா நாட்டம் செலுத்தி வருகிறது.

அதன் விளைவுதான்—இந்தியா எதிர்பார்த்தபடி எந்த உதவியும் இதுவரை கிடைக்காதது!

உதவி எதுவும் கிடைக்கவில்லையென்று ஓலமிடுகிறார் இந்திய நிதி அமைச்சர் இப்போது!

எனினும், சூட்சம புத்தியுடன் அமெரிக்காவிற்கு எச்சரிக்கை விடுகிறார், 'அமெரிக்கா உதவி செய்து இப்போதே இந்தியாவின் அன்பைச் சம்பாதித்துக்கொள்ளட்டும்! இல்லையேல், நாங்கள் வேறு வழி பார்த்துக் கொள்வோம் — பிரிட்டன் இருக்கிறது' என்று தந்திர எண்ணத்துடன் சட்ட சபையில் வெளியிடுகிறார்.

நிதி மந்திரியின் கருத்துப்படி, பிரிட்டனிடமிருந்து இந்தியாவுக்கு ஏதாவது பண உதவி கிடைக்குமா என்பதற்கு விமர்சனமும் விளக்கமும் தேவையில்லை தனது நிதி நிலைமை இன்னும் சீர்படவில்லை எனப் பரிதாபச் சிந்து பாடிக் கொண்டிருக்கும் பிரிட்டனால் துளியளவும் நமக்கு உதவி கிட்ட முடியாது!

எனினும் காரியத்துக்குப் பயன்படாவிட்டாலும் பேச்சுக்காவது பயன்படட்டுமே என்று பயமுறுத்தல் விடுகிறார்!

இந்தப் பயமுறுத்தல் பலன் தருமா — அமெரிக்காவைப் பணம் உதவி செய்ய இது அவசரப்படுத்துமா என்பது வேறுவிஷயம்.

ஆனால், கவனிக்கப்பட வேண்டியது, இந்தியா அந்நிய மூலதனத்தைக் கொண்டே தான் வாழ முடியுமா, வேறு வழிகளே கிடையாதா என்பதுதான்.

காங்கிரஸ் ஆளவந்தார் ஆட்சிப் பீடம் ஏறிய நாள் முதல் அந்நிய நாடுகளிலிருந்து மூலதனம் வந்தால தான் எதுவும் நடைபெறும் என்று எண்ணி வருகின்றனர்.

அமெரிக்க மூலதனம் எதுவும் வரவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் நிதிமந்திரியாரும் அந்நிய மூலதனத்தின்மீது முன்பிருந்த அக்கரையைக் குறைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை!

அமெரிக்க முதலாளிகள் கவனஞ் செலுத்தவில்லையென்றால், பிரிட்டன் இருக்கவே இருக்கிறது என்று, 'இது போனால் அது' என்றே பேசுகிறார் அவர்!

வெளிநாட்டு மூலதனம் தொழில் துறைகளில் ஆதிக்கம் வகிப்பதால் ஏற்படும் விளைவுகள் வேதனையைச் சிருஷ்டிக்குமே யொழிய, பலன் தந்துவிட முடியாது. எனினும், இந்திய ஆளவந்தார் இன்னும் எதிர்பார்க்கின்றனர், எங்கிருந்தாவது 'பணம் கிடைக்குமா' என்று.

*   X   *

நாட்டின் தொழில் முன்னேற்றத்துக்கு என்னென்ன உற்பத்திப்பொருள்கள் வேண்டுமோ, அவை அவ்வளவும் இந்தியாவில் இருக்கின்றன.

இந்தக்கருத்தை வெளியிட்டவர் சாதாரணமான ஆசாமியல்ல, இந்தியசர்க்காரின் கைத்தொழில் ஆலோசகர்-கைத்தொழில் வளர்ச்சி குறித்து ஆராய்ச்சி செய்து முடிவுகள் கூறுமாறு சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டவர். அவர் அண்மையில் ஐப்பபூரில் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

டாக்டர்டுரோன் தந்துள்ள தகவலில் உலகத்தில சிறந்த தொழில் வளர்ச்சியுள்ள நாடாக இந்தியா ஆகமுடியும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அவர் விஷயமறியாதவரல்ல; அவர் கூறியதை வீண் சொல் என்று வெறுத்து விடவும் முடியாது.

இந்தியா இயற்கைவளங்கள் நிரம்பிய நாடு—காடும் மேடும் ஆறும் நீரும் கொழித்துக்கிடக்கும் பூமி. இத்தகைய மாபெரும் உபகண்டத்தில், வேண்டிய மூலப் பொருள்களை உற்பத்திசெய்வது கடினமான காரியமல்ல.

காரிய மாற்ற வேண்டிய ஆசையும் கவலையும் ஏற்படுமேயானால் தொழிலபிவிருத்திக்கான மூலப்பொருள்களை அபரிமிதமாகப்பெறமுடியும்.

மூல பொருள்களைப் பயன்படுத்தித்தொழில்களை வளமாக்கினால் உற்பத்தி பெருகும். பொருளுற்பத்தி பெருகினால் அதை வாங்கி உபயோகிக்க மக்கள் வேண்டும்.

உற்பத்தியாகும் பொருள்களை வாங்கிப் பயனடைய இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள்.

மக்கள் இருக்கிறார்கள் — ஆனால் உற்பத்திப் பொருள்களை வாங்கிப் பயனடையும் வகையில் அவர்கள் இல்லை! ஏழ்மை —அவர்களை இயலாதவர்களாக்குகிறது!

இந்தியா—ஒரு ஏழ்மை நாடு என்று கூறப்பட்டு வருகிறது—

உண்மை! ஏழ்மை இருப்பதன் காரணம் இந்தியா ஒரு பெரிய விவசாய நாடாக இருப்பதுதான்!

பண்டைக்காலக் கலப்பை ஏர்முதலியவைகளைக் கொண்டே விவசாயி தன் பயிர்த் தொழிலைச் செய்கிறான்—பலன் விளைச்சலில் மாறுதல் கிடையாது!

விவசாயியின் வாழ்விலும் உழவு முறையிலும் இருக்கும் பழமை நீக்கப்பட்டு இயந்திர சாதனங்கள் மூலம் அவனது விவசாயத்தொழில் நடைபெற ஆவன செய்யவேண்டும்.

அப்போது வயலில் விளைச்சல் அதிகமாகும் — வாழ்விலும் வசதி உயரும் — தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிக் கடைக்குவரும் பொருள்களையும் அவன் வாங்கச் சந்தர்ப்பம் ஏற்படும்!

மூலப்பொருள் இருக்கிறது—அது தொழிற்சாலைகளுக்குக் கொண்டு போகப்பட்டு வாழ்க்கைக்குத்தேவையான பொருளாக உற்பத்தி செய்யப்பட்டால் அதை வாங்க மக்களும் இருக்கிறார்கள்!

ஆனால்! மூலப் பொருள்களைக் கொண்டு தேவையான பொருள்களைத் தயாரிக்க ஆலைகள் வேண்டுமே!

சிக்கலான கேள்வி! ஆனால் சாதாரணமானது. வெளிநாட்டுமூலதனம் வேண்டுமெனச்சர்க்கார் கூறுவதெல்லாம் இந்த ஆலைகளுக்காகத்தான். பொருள்களை உற்பத்தி செய்ய ஆலைகள் அவசியம்—மிக மிக அவசியம்! ஆனால் அந்த ஆலைகளை நிறுவவோ ஆளவந்தாரிடம்பணமில்லை. எனவே, வெளிநாட்டு முதலாளிகளைக் கைகூப்பி அழைக்கிறோம் என்று காரணங்காட்டப்படுகிறது.

இதுபற்றியும் டாக்டர் டுரோன் கூறும்போது, குறைந்த மூலதனத்தைக்கொண்டு பொருளாதாரத் துறையில் எதிர்பார்க்க முடியாத வெற்றிகளைச் சிறுநாடான ஜப்பான் சாதித்திருப்பதைக் காட்டுகிறார்.

சிறுநாடு ஜப்பான், சிறந்த முறையில் முன்னேறித்தானிருக்கிறது. இதற்குக் காரணம் கூறுகையில், அவர் "மனித உழைப்பும் உறுதியும் மகத்தான காரியங்களைச் சாதிக்கும்" என்றுவிளக்கியுள்ளார். உண்மையில் தெளிந்த சிந்தனையும், எடுத்த முயற்சியில் வெற்றிபெற வேண்டும் என்ற ஆவலுமிருந்தால் எக்காரியத்தையும் சாதித்துவிடலாம்.

எனவே அந்நிய மூலதனத்தை எதிர்நோக்கிக் காலத்தை வீணாக்குவது வீண்வேலை – வெற்றிதரமுடியாத காரியம்.

அமெரிக்க மூலதனம் இல்லையென்றால் பிரிட்டன் தரும் என்ற பேச்சும், பிரிட்டனைக்காட்டி அமெரிக்காவை மிரட்டும்தந்திரசாகசமும் பலன் தந்துவிடாது.

அமெரிக்காவை எதிர்பார்ப்பதைவிடப் பிரிட்டனை எதிர்பார்க்கலாம் என்று மந்திரிமதத்தாய் அறிவிக்கையில், "வெளிநாட்டிலிருந்து வட்டிக்குப்பணம்வாங்கி பெரியதொழில் திட்டங்களை நிறைவேற்றும்யோசனையை நாம் கைவிட்டு விட வேண்டும். வெளிநாட்டுக் கடன் சுமையை நாம் தாங்கமுடியாது"

என்று கூறியுள்ளார் — இந்த ஞானோதயம் இப்போதாவது ஏற்பட்டிருப்பதைக் காண நமக்கு மகிழ்ச்சி. இந்த ஞானோதயம், அமெரிக்காவை மிரட்டும் தந்திரோபாயமாக மாறிவிடாமல் நாட்டு நன்மைகளுக்கான-வழிகளைச் செய்யட்டும்!

—✻—

## ஏன் இது?

7-ம் பக்கத் தொடர்ச்சி

கம்யூனிசம் வளராமல் தடுக்க 'பர்மிய சர்க்காரை' தன் பாவையாக உபயோகப் படுத்திக்கொள்ள மேல் நாட்டு முதலாளித்துவம் தயாராகியிருக்கிறது. அமெரிக்கா, மார்ஷல் கடன், பிற்போக்கு நாடுகளுக்குக் கடன் என்ற திட்டங்களைத் தீட்டி வைத்துக்கொண்டு தயாராகயிருக்கிறது.

இங்கிலையில் 'ஏழை' இந்தியா, பர்மாவுக்குக் கடன்தரப் போகிறதாம்—

அமெரிக்க பாங்கியை, ட்ரூமன் சர்க்காரை, வெள்ளை முதலாளித்துவத்தை நோக்கிக் கையேந்திக்கிடக்கும் இந்திய சர்க்கார்—கடன் வழங்கப்போகிறார்களாம், வட்டியில்லாமல்!

காமன்வெல்த் நாடுகள் முடிவு செய்துவிட்டபொழுது நாம்மட்டும் எப்படி மறுக்கமுடியும், இயலுமா, கௌரவத்துக்குப் பங்கம் வந்துவிடாதா—என்று கேட்கலாம்.

இந்தச் சந்தேகத்தையும் நியூஜிலந்து நிவர்த்திசெய்கிறது. காமன்வெல்த் நாடுகளில் ஒன்றான நியூஜிலந்து கடன் கொடுக்கும் இந்த ஏற்பாட்டுக்கு இசையவில்லை. கனடா—இன்னொருநாடு—இன்னும் இந்த ஏற்பாட்டுக்கு இசைந்ததாகத்தெரியவில்லை.

எனினும் இவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள், 1½ கோடி ரூபாய்களை உதவப்போவதாக.

ஏனிந்த அவசரமும், அவசியமும் "ஏழைகள் சர்க்காருக்கு" ஏற்பட்டதோ தெரியவில்லை!

மாகாணத்து மக்களுக்குப் பயன்படும்வகையில் ரூ. 75,000 தரப்பணமில்லை — ஆனால் உருவான பலன் எதுவும் கிடைக்கமுடியாத வெளிநாட்டுக்கு, பர்மாவுக்கு, பணம்போகிறது — ஆயிரக்கணக்கில் அல்ல, கோடிக்குமேல்!

*   •   *

பர்மா—கம்யூனிசத்துக்கு இலக்காயிருக்கும் நாடு. அதைக்காப்பாற்றும் ஆசையும் ஆர்வமும் முதலாளித்துவக் கொள்கையை நிலைநாட்ட விரும்பும் ஆதிக்கவர்க்கத்துக்கு எழும்புவது இயற்கை.

ஆனால், ஏழைகள் வாழ்வே எங்கள் வாழ்வு, என்று கூறித்திரியும் இவர்களுக்கு ஏன் ஏற்படவேண்டும்—கேட்கத்தான் தோன்றும் சிந்தையில் தெளிவுள்ளவர்களுக்கு.

மாகாணத்தின் வருமானங்களை வாரிக்கொண்டு போகும் மத்திய சர்க்கார், மாகாண மக்களுக்கு நன்மை தரும் புது முயற்சியொன்றுக்குப் பணமில்லை, பார்க்காதே இந்தப் பக்கம் என்று உத்தரவிடுகிறது! முன்பு தருவதாகச் சொல்லிவிட்டு, இப்போது இல்லையென்று, எதிர்பார்த்திருந்தோர் முகத்தில் கரி பூசுகிறது!

அதே நேரத்தில் பயன் தராத—கொடுத்த பணம் திரும்பி வருமோ என்ற சந்தேக நிலையிலுள்ள பர்மாவுக்குப் பணம் தருகிறது, கோடிக்கணக்கில்—அதுவும் வட்டியில்லாமல்!

அடிப்படைச் செலவுகளுக்குப் பணம் தேவையென்று சர்வதேச பாங்கியிடம், 'வட்டி தருகிறேன். பணம் கொடுங்கள்' என்று கையேந்தும் சர்க்கார் வட்டியில்லாமல் கடன் கொடுக்கிறது!!

(12-ம் பக்கம் பார்க்க)

# திட்டக் கமிஷன்!

முன்னர், பல திட்டங்கள் தீட்டப்பட்டன—அரசியல் கட்சியாலும் உத்தியோகச் சார்பற்ற முறையிலும்! இப்போது சர்க்காரே முன்வந்து திட்டம் தீட்டுவதற்கான ஒருதிட்டக் கமிஷனை நிறுவியிருக்கிறது!

நாட்டின் பிரச்னைகளை அலசி, பொருளாதார ரீதியில் முன்னேறும் வழிவகைகளைக் காண்பதுதான் இத்திட்டக் கமிஷனின் நோக்கம்.

தேசியப் புனருத்தாரணத் திட்டக் கமிட்டி 1938ல் இந்திய காங்கிரசால் நிறுவப்பட்டது, மக்களின் சமுதாய நிலை, பொருளாதார சமத்துவம் ஆகியவைகளை ஆலோசனை செய்து யோசனைகள் சமர்ப்பிப்பதற்காக! பின், இக்கமிட்டி கலைக்கப்பட்டது—உருவான பலன் எதுவும் உருவாகவில்லை!

காங்கிரஸ் ஆட்சிப் பீடமேறுமுன் இந்திய பொருளாதார முன்னேற்றம் குறித்து ஆலைஅரசர்கள் கூடி ஆலோசனை செய்து, பம்பாய் திட்டம் ஒன்றைத் தயாரித்தார்கள். அதுவும் பேசாத பாவையாக்கப்பட்டு விட்டது — நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை! எனினும் இந்தப் பணமுதலைகளின் பம்பாய்த் திட்டம்தான் ஆட்சி அதிகாரம் பெற்ற காங்கிரஸ் சர்க்காரின் கொள்கையாக மாறியது! நாடு சுதந்திரமடைந்ததும் நல்லதொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்பட்டுப் பொருளாதார முன்னேற்றம் பெற வெளிநாட்டிலிருந்து மூலதனம் வரவேண்டும் என்ற யோசனை—பம்பாய் திட்டத்தின் பகுதியாகும். இந்த யோசனை இந்திய சர்க்காரால் பன்முறை எதிரொலிக்கப்பட்டது—எனினும் பலன் தரவில்லை, மூலதனம் வெளி நாடுகளிலிருந்து வந்து குவிந்துவிடவில்லை!

நாட்டின் வளர்ச்சி குறித்துப் பலரால், பல சந்தர்ப்பங்களில் தீட்டித் தரப்பட்ட திட்டங்கள் பல—எனினும் அவை பயன் தரவில்லை!

இப்போது, இந்திய சர்க்கார் தமது பெரு முயற்சியின் மீது திட்டக்கமிஷன் (Planning Commission) ஒன்றைப் பிரதமர் பண்டித நேரு தலைமையில் நிறுவியிருக்கிறார்கள். புதுக்கமிஷன்—சுயராஜ்ய ஆட்சியில் பூத்திருக்கிறது!

நாட்டின் நிலை, அங்கு கிடைக்கும் வசதிகள் ஆகியவைகளைக் கொண்டு பொருளாதார முன்னேற்றம் அடையும் பாதைகளை வகுப்பதுதான் இக்கமிஷனின் வேலை என்று விளக்கியுள்ளனர்—சர்க்கார்.

X X X

ஒரு நாடு பொருளாதாரத் துறையில் பொன் விளையும் பூமியாக இருக்கிறது — முன்னேற்றமடைந்து நிற்கிறது என்று சொல்லவேண்டுமானால், அந்நாட்டின் பொருளாதாரம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கவேண்டும். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே நாட்டின் பொருளாதாரத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்.

மக்கள் வாழ்க்கையில் மலர்ச்சி வீசும் இந்த அடிப்படைத் தேவைகளை நல்ல முறையில் பூர்த்தி செய்வித்தால்தான் அந்நாட்டின் பொருளாதாரம் செழிப்புற்றிருப்பதாகக் கூறலாம்!

பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன; அவை யாவும் மக்களுக்குக் கிடைக்குமாறு பங்கிட்டுக் கொடுக்கப்படுகின்றன—இது களங்கமில்லாத ஒரு நாட்டின் பொருளாதாரத் திட்டமாகும்.

உற்பத்தியாகும் பொருள்கள் மக்களுக்குப் பயன்படவில்லை; லாபக் கொள்ளைக்கு விற்கப்படுகின்றன—இது சீரழிந்த பொருளாதாரத்தின் சின்னம்!

நாடு—காடும் கழனியும் ஆறும் குளமும் நிறைந்த பூமி! மனிதனுக்குத் தேவையான அத்தனை பொருள்களும் பூமியிலிருந்துதான் உற்பத்தியாகின்றன. இயற்கை—எல்லோருக்கும் பொதுவானசொத்து! அது தரும் இன்பம் எல்லோருக்கும் சொந்தமானது—இந்த அடிப்படையில்தான் எந்த நாட்டினுடைய பொருளாதார நிலையும் இருக்கவேண்டும்.

மனிதனின் முதல்தேவை உணவு—பின்னர் ஆடை, அணிகலன் முதலான கைத்தொழிற் பொருள்கள்!

இந்தியா-ஒருவிவசாயநாடு, நூற்றுக்கு எண்பதுபேர் இங்கு விவசாயிகள்! நிலத்தையும் கலப்பையையும் நம்பிக்கொண்டு காலத்தை நகர்த்துபவர்கள்.

இந்தியப் பொருளாதாரம் முன்னேற்றம் பெறவேண்டுமானால் அதற்கான முயற்சிகள் ஆரம்பமாகவேண்டிய இடம் — விவசாயத்துறைதான். மனிதனுக்கு வேண்டிய இன்றியமையாத உணவுப்பொருட்களை உற்பத்திசெய்து தருபவன் விவசாயி. ஆனால் அவன் வாழ்வில் வேதனை வீசுகிறது!

ஒரு நாட்டின் பொருளாதாரம் அங்கு வாழும் மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் இருப்பதுதான்.

நாட்டின் பெரும்பாலான மக்கள்—விவசாயிகளாகயிருக்கிறார்கள்-அவர்கள் வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்தால்தான் இந்திய நாட்டின் பொருளாதாரம் சுமுகமாகயிருக்கிறது என்று விளங்கும்.

இந்த அடிப்படை எண்ணம் ஆள் வந்தார் முதல சிறந்தபொருளியல் நிபுணர்வரை பேசும்போது எதிரொலிக்கப்படவில்லை.

எல்லோரும் இந்நாட்டின் பொருளாதார சுபீட்சம் — தொழிற்சாலைகளிலே பொதிந்து கிடப்பதாகவே கருதுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையடையவேண்டுமானால் தொழில் ஆலைகள் ஏற்படவேண்டும்—அப்போதுதான் தொல்லைகள் மறையும் என்று கூறி வருகின்றனர்.

நாட்டில் சுபீட்சமில்லை: காரணம் பெருந்தொழிற்சாலைகள் இல்லையென்று முழக்கமிடுகின்றனர்—அந்நிய நாடுகளை அண்ணாந்து பார்க்கின்றனர்!

தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு ஏராளமான பொருள்கள் உற்பத்தி

செய்யப்பட்டு விட்டால் போதும், மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி எழும்பி விடும் என்ற கருத்து அவர்கள் பேச்சுகளிலெல்லாம் எதிரொலிக்கிறது.

ஒரு நாட்டின் செல்வநிலை அந்நாட்டின் ஆலை வளத்தைப் பொறுத்ததுதான்—மறுக்கமுடியாது. அபரிமிதமான பொருள்கள் உற்பத்தியானால்தான் மக்கள் சங்கடமின்றி வாழமுடியும்.

ஆனால், ஆலைகள் பொருள்களை உற்பத்திசெய்து குவிக்கும் பொழுது அப்பொருள்களை வாங்கியனுபவிக்கும் வகையில் மக்கள் இருக்கவேண்டும்.

ஆலையிலே அழகான உடை தயாரிக்கப் பட்டுவிட்டால் மட்டும் போதாது—அதை சாதாரண ஒரு பிரஜை கூட வாங்கியுடுக்கவேண்டும்.

பிரஜை வாங்க வேண்டுமானால், அந்தத் துணியை வாங்கும் நிலையில் அவன் இருக்கவேண்டும்.

இந்தியாவின் பெரும்பாலான குடிமக்கள் குடியானவர்கள்—இந்தியாவின் பெருந்தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்கள்யாவும் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும்.

ஆலைகள் பொருள்களை உற்பத்தி செய்து விட்டாலமட்டும் போதாது. அவைகளை வாங்கும் நிலையில் மக்கள் இருக்கவேண்டும்!

மக்களோ — விவசாயிகள், அவர்கள் வாழ்வோ சுகச்சோலை இல்லை! துயரமும் ஏழ்மையும் நிறைந்து கிடக்கிறது.

இந்த அடிப்படையை மறந்துவிட்டு ஆளவந்தாரும் பிறரும் திட்டங்களைத் தீட்டிக்கொண்டே போகிறார்கள்.

இந்திய நாட்டின் பொருளாதாரம்—இங்கு வாழும் விவசாயிகளைப் பொறுத்தே இயங்குவதாகும்.

எனினும் விவசாயத்துறைபற்றிய கவனமும் சிரத்தையும் பலர் கருத்தில் எழும்புவதில்லை. பீடத்தை மறந்து விட்டு மாளிகைநிர்மாணிக்க முயற்சிக்கிறார்கள்!

தேசியப் பொருளாதாரம்—நாட்டின் விவசாய உற்பத்தியைப் பொறுத்து இருக்கிறது. இதை மறந்துவிட்டு, தொழிற்சாலைகளைத் தோற்றுவித்து விட்டால் போதும், சுகம் மலர்ந்துவிடும் என்று காற்றிலே கோட்டை கட்டுகிறார்கள்!

மாளிகை கட்டப்படுமுன் அடிப்பீடம் அமைக்கப்பட வேண்டும்—தேசிய பொருளாதாரத்தைச் சீர்படுத்த விவசாயத் துறையில் கவனஞ் செலுத்த வேண்டும்.

விவசாயமோ, பழைமைப் பிடியில் சிக்கிக் கிடக்கிறது—ஏரும், கலப்பையும், எருமை மாடுகளுமே அதன் சாதனங்களாக இருக்கின்றன. போதிய உரம், தேவையான வசதிகள் இல்லை!

விவசாயம் வளர்ந்து, குடியானவன் கையில் பணம் சேர்ந்தால், ஆலைகளில் உற்பத்தியாகும் அத்துணைப் பொருள்களும் விற்பனையாகும். பொருள்கள் விற்பனையாக ஆகமென்மேலும் பொருளுற்பத்தி குவியும்—நாடு நலமுறும், தேசப் பொருளாதாரமும் சிறந்த நிலையை அடையும்!

இந்த உண்மையை மறந்துவிட்டு இந்தியாவைச்சிறந்த தொழிற்சாலைகளடங்கிய நாடாக ஆக்குவதே எங்கள் முதல் வேலையென்று முழக்கமிடுகின்றனர்.

* *

இந்தியபொருளாதாரத்தின் இன்றைய அடிப்படைப் பிரச்னை—ஏழ்மை நிலைதான்! தேவைக்கேற்ற வசதிகள் கிடைக்கவில்லை, எனவே தரித்திர நாராயணர்களாக மக்கள் வாழ்கிறார்கள்.

தேவைக்கேற்ற பொருள்களை உற்பத்தி செய்து—அவைகள் மக்களுக்குக் கிடைக்கும்படியான வழி வகைகளைக் காணவேண்டும்.

இந்த நிலை, முதலாளித்துவ முறையால் ஏற்பட்டுவிட முடியாது. முதலாளித்துவ முறைப்படி—பொருள்கள், மக்கள் வாங்கும் சக்தியையொட்டி உற்பத்தி செய்யப்படுவதாகும். தேவைக்கானபொருள்களை உற்பத்தி செய்வோம் என்பது முதலாளிகளின் ஆசையாக இருக்காது; இலாபத்துக்கான வகையில் பொருள்களைத் தயார் செய்யவேண்டும் என்பதுதான் அவர்களுடைய திட்டமாகும்.

தேவைக்கேற்ற பொருள்கள்—என்ற குறிக்கோளில்லாமலிருந்தால மக்களின் வாழ்க்கை நிலையில் மாற்றமடையாது, வாழ்க்கைத்தரம் மோசமாகவே இருக்கும். மக்களின் ஏழ்மை நிலை தீர்க்கப்பட்டுவிட முடியாது! தொழிற்சாலைமயமாக நாட்டை ஆக்கினாலும் பயனேற்படாது!

சர்க்காரின் திட்டக்கமிஷன் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் காரியங்கள்:

நாட்டின் மூலதனம், மனித சக்தி, கிடைக்கும் சாதனம் எல்லாம் பயன்படுத்தப்படும்.

> இப்படிக் கிடைக்கும் வசதிகளைக் கொண்டு நல்ல முறையில் காரியங்களை ஆற்றத் திட்டம் தீட்டப்படும்.

என்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுருக்கமாக இக்கமிஷனின் இலட்சியங்கள் பற்றிக் கூறப்போனால் எங்கெங்கு பொருளாதாரம் காண முடியுமென ஆராய்ச்சி நடத்தி அறிவிக்கப்போவதுதான்—அப்படிப் பொருளைத் தேடி அதன் மூலம் மக்கள் தேவைகளைக் கவனிக்கப் போவதுதான்!

எனவே பொருள்களை உற்பத்தி செய்து அவைகளை மக்களுக்குப் பங்கிடுவோம்—என்ற அடிப்படை இலட்சியம் இல்லை!

காரணம் தொழில் ஆலைகள் குறித்த ஆர்வமும், தனிப்பட்ட முதலாளிகளின் சுகபோக வாழ்வு நீடிக்கும் வகைகளும், அதற்கான முயற்சிகளுமே திட்டக்கமிஷனின் வேலைகளா இருக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது—அது மேற்கொள்ளப் போகும நடவடிக்கைகள் குறித்த விளக்கங்களையும் விமர்சனங்களையும் காணும்போது.

✻

10-ம் பக்கத் தொடர்ச்சி

விசித்திரமான வேடிக்கை — ஒரு பரந்த உபகண்டத்தின் ஆளவந்தாருடைய செயல்!

வேதனை நிரம்பிய காட்சி இது தான் முதலாவது அல்ல. முன்பும், பணம் தருகிறேன் என்று சொல்லிவிட்டு மாகாண சர்க்கார் கை நீட்டிய பொழுது இல்லையென்று மறுத்தனர் மத்திய சர்க்கார்.

கொடுப்பதாகக் கூறிவிட்டு பின் இல்லையென்று கூறுவது — நடந்து கொண்டுதானிருக்கிறது. எனினும் நாம் அவர்களை 'ஆபத்பாந்தவர்'கள் என்று எண்ணிக்கொண்டுதான் இருக்கிறோம்—வரி இனங்களைத் தந்துகொண்டுதான் இருக்கிறோம்—வாழ்க்கையில் வேதனைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறோம்.

—()—

# மனப்போர்

**தில்லை வில்லாளன்**

கொலை, களவு, பொய், காமம், சூது, குடி, கோபம்......எல்லாம் பாவத்தின் வெவ்வேறு வடிவங்களாம்! இவைகள் இல்லாமல் மனிதன் வாழ்கிறானா எவ்வளவோ உபதேசங்களைக் கேட்டபிறகும்? வாழும்படி அந்தப்பாழும் படைக்கும் கடவுள் ஏன் செய்யவில்லை? படத்தையும், சட்டத்தையும், கண்ணாடியையும், அணிகளையும் கொடுத்து இப்படிப்போட்டால் படம் அழகாக இருக்கும் என்று சொல்வதைக்காட்டிலும், போட்டுக்கொடுத்துவிட்டால் சுவரில் அழகாக மாட்டலாமல்லவா? நம்மைச்சோதிக்க இவ்வளவு தொல்லைகள் ஏன்? கொலையை எதிர்த்த சமணரும், புத்தரும்தோற்றுப்போனார்கள் என்பதா...வெற்றி அடைந்தார்கள் என்று சொல்வதா? அசோக தருமம் அழிந்துவிட்டதென்பதா? விஞ்ஞானயுத்தம் பெருகிவிட்டதென்பதா? காந்தியம் வென்றதென்பதா? இட்லர்வதம் சரி என்றுகூறுவதா...என்னவென்று யாரிடம் கூறுவது? பொய்சொல்வது கூடாது என்று கூறவந்த வள்ளுவரே, பொய்யும் வாய்மையிடத்து புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின் என்று, புளுகவேண்டிய இடத்தில் புளுகத்தான்வேண்டும், இல்லாவிட்டால் வாழமுடியாது என்றுசொல்லிவிட்டாரே! அரிச்சந்திர மகாராஜா கூடவா நாம் வாழ்கிறோம்? புளுகாத காவலன் என்றுபோற்றிப்பேசுவோர் பலரிடையே அவனும் தவறிவிடவேண்டி வந்ததுஎன்று அந்தக்கதையினாதாரத்தைக்கொண்டே நிரூபிக்கும் நிபுணர்கள் இருக்கிறார்களே, அரசனையும், ஆண்டியையும் உண்டாக்கித் திருடாதே என்று கூறினால் முடியுமா? ஏற்ற சோடி ஏற்பட வழியை அடைத்துவிட்டு, எறிக்குதிக்கவேண்டிய அவசியத்தையும் உண்டாக்கி, பிறகு அது தவறு என்றால் எப்படிமுடியும்? விபசாரத்தை, காமக்களியாட்டத்தைத் தடுக்க வேண்டும் என்று பேசிப் பயன் என்ன? கோபம் இல்லாதவன் மனிதனே அல்ல......என்று ஒருவர் விளக்கம் சொன்னார். சமைக்கும் விலங்கு, சிரிக்கும் பிராணி, அரசியலறிந்த மிருகம்......என்று மனிதனைச்சொன்னது போலவே, அவரும் சொன்னார். கொடுமையைக் கண்டு கோபிக்காமல் வாழமுடியுமா? எல்லோரும் துறவிகளா?......முனிபுங்கவர்களா? அவர்கள்கூடக் கோபிக்காமல் வாழ்ந்ததில்லையே...... சாபம் என்ற வார்த்தையே அவர்களின் கோபவிளைவைக்குறிக்கும்! இப்படியெல்லாம் சொல்வதின்மூலம் பாவம் செய்யத்தூண்டுகிறோம் என்பதா கருத்து......அல்ல, அல்ல! பாவத்தையே களைந்தெறிந்த ஒரு சமுகம் அமைக்க முடியாதா ... முடியும் ... அது எப்படி என்று ஆராயத்தான்! செய்யாதே என்பதைக் காட்டிலும், செய்யக்கூடாதா, செய்யவேண்டாத நிலையை உண்டாக்கிவிட்டால் எவ்வளவு எளிதாகிவிடும்!

பாவத்தைச் செய்யாதே என்று கூறி, புண்ணியத்தைச் செய் என்று வேண்டிநிற்பதைக்காட்டிலும், அதற்கேற்ற வகையில் சமுகத்தை மாற்றிவிட்டால்...எவ்வளவு சிறப்படையலாம்! உதாரணமாகத் திருடாதே என்று சொல்வதைக் காட்டிலும், திருடினால் சிறைவாசம் என்று பயமுறுத்துவதைக்காட்டிலும், திருட்டு எண்ணமே ஏற்படாத வகையில் எல்லோரிடமும் திருப்திகரமான முறையில் உழைப்பிற்கேற்ற ஊதியம்,... தேவைக்கேற்ற அளவில் அது அமைக்கப்பட்டால்...அந்தப் பாவம் பயந்தோடிவிடாதா? இப்படி முகுந்தனும், நீலனும் வாதமிட்டுக்கொண்டனர், அவர்கள் பேசிய பேச்சுக்களிலிருந்து சேர்த்துப் பொறுக்கிக் கட்டிய மணிமாலைதான் இது!

வண்டி திருச்சிக்கு வந்து சேர்ந்தது;மூவரும் இறங்கினர். முகுந்தன் அறைக்கே சென்றனர். குளித்து முடித்துக் காலைபுணவு அருந்தினர்.

"இப்பொழுதே போகிறேனே..."

துடித்தான் சேரன்.

"பொறுமை வேண்டும். அவசரமின்றேல் அழிவில்லை என்ற பழமொழி கேட்டதில்லையா?"

என்றான் நீலன்.

"பின் என்ன செய்யச் சொல்கிறாய்?"

"பத்துமணிக்குமேல் மருத்துவமனைக்கே சென்று அவளைச் சந்தி... அவளது வரவேற்பு எப்படி இருக்கிறது என்று வந்துசொல்...பிறகு யோசிப்போம்"

'சரி' என்றான்.

முகுந்தன் அவர்கள் தனியாக நின்று பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தான்.

## சந்திப்பு

'வில்லி சாய்வு-நாற்காலியில் சாய்ந்தபடியே அன்றுவந்த "பொன்னி"

இதழைப் புரட்டிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் மனம் அந்த ஏடுகளிலே பதியவில்லை என்பது நன்றாகப் புரிந்துவிட்டது!

ஆம், அவள் மதுரை மாசி வீதியில் உள்ள அவர்கள் வீட்டு முற்றத்தில் இருந்தாலும் அவள் மனம் திருச்சியில அவளது தோழி பாக்கியத்தின் தனிவீட்டிலே தங்கியிருந்தது! அன்று மட்டுமல்ல, அவள் 'ஆபீசில்' தனது வேலைகளில் சிந்தனையைச் செலுத்தும்போதெல்லாம் பாக்கியம் குறுக்கே வந்து நின்றுவிடுவாள்.........பிறகு அவளோடு வார்த்தையாடவே பொழுதிருக்காது!

வில்லிக்குத் தொடர்கதை படிப்பதிலே ஒருவகையான வேகமான ஆர்வம்...அதுவும் ஒருவன்—தனது உயிருக்குயிரான தோழியின் உண்மை வரலாற்றையே படிக்க நேர்ந்தால் எவ்வளவு பரபரப்பிருக்கும்! பாக்கியத்தின் கடிதங்களே தொடர்கதை தாங்கி வரும் சஞ்சிகைகள்! அவள் எழுதுகிற பகுதியோ காதல் பகுதி—இனிச் சொல்லவும் வேண்டுமா? அதுமட்டுமல்லாமல் அவளும் அத்தகைய புயலிலே சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறாள்! இருட்டு வழி செல்லவேண்டுமென்று ஏங்கிக்கொண்டு நின்ற வழிப்போக்கனுக்கு அவனுக்குத் தெரிந்த தோழன் ஒரு பெரிய 'அரிக்கன்' விளக்குடன் துணைக்கு வந்து சேர்ந்துவிட்டால் அவன் மனதிலே எவ்வளவு அமைதி ஏற்படும்? அப்படித்தான் வில்லியும் இருந்தாள்!

* * *

வரலாமோ என்று கடிதம் எழுதிவிட்டு மறுநாளே சேரன் திடீரென்று பத்துமணியளவில் மருத்துவமனைக்கே வந்துவிட்டான். பாக்கியம் அவனைப் பார்த்துவிட்டாள். ஆனால் பாராதவள் போல இங்கும் அங்கும் சென்று நடமாடிக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் மனம் சும்மா இருக்கிறதா...தத்தி நடக்கும் குழந்தை அடிக்கடி எழுந்து நிற்பதும், விழுவதும், பிறகு அழுவதுமாக இருக்குமல்லவா, அப்படித்தான் குழந்தை விளையாட்டாடிற்று! சேரன் மட்டும் என்ன......அவ்வளவு ஏமாந்தவனா? அவன் மகாகுறும்புக்காரன்போலும்! அவளையே போய்க்கேட்டான் கொஞ்சமும் சிரிக்காமல்......'பாக்கியம் என்ற மருத்துவப் பணிப்பெண்ணை அவளது நண்பன் பார்க்க வேண்டும் என்று சொல்கிறீர்களா' என்று! அவளுக்குச் சிரித்து அப்படியே அவன் கரங்களைப் பிடித்து இழுத்துப் போய் நாற்காலியில் உட்காரவைக்க வேண்டும் என்ற ஆசை...ஆனால் அதை வெளியில் காட்டவே இல்லை. மகா கெட்டிக்காரி! வெறுப்பும், கோபமும் கலந்த பார்வையில் அவனைப் பார்த்தாள். அவன் உண்மையில் கலங்கிவிட்டான். மன்னிக்கவேண்டும்......பாக்கியத்தைப் பார்க்க இப்பொழுது முடியாது...வேலைக் கடுமை!...என்றாள். அவன் முகம் மாறிவிட்டது!

“பாக்கியம்......என்னை மன்னித்துக்கொள்” என்றான் பெருமூச்சோடு.

“வருந்துகிறேன்...பிறகு சந்திப்போம்.”

அவள் சொல்லிக்கொண்டே 'ஆபரேஷன் தியேட்டருக்கு' அவசர அவசரமாக சென்றுவிட்டாள்.

சேரன், தன்னை அவமானப்படுத்தியதாகத்தான் கருதியிருப்பான். வலிய வந்ததால் இந்த வேதனையான வரவேற்பு என்று மனம் புண்பட்டிருப்பான். பெண்களை மெழுகு என்று நினைத்திருக்கிறார்கள். தங்கள் வார்த்தையை அனலில் உருக்கிவிடலாம் என்று கனவுகள் காண்கிறார்கள். பெண்மனம் ஒரு விசித்திர உலோகத்தாலானது......உருக்கும் முறையோடு உருக்கினால்தான் இளகும். இல்லாவிட்டால் வெடித்துப் பொடியாகிவிடும்! சேரன் தவறிவிட்டானா? இல்லை. பாக்கியம் அவனை முழுவதும் புரிந்துகொள்ள ஆசைப்படுகிறாள், அதற்காக அவள் காதல் பாதையில் அவன் ஓடநினைக்கும்பொழுது அவள் 'ஸ்லோவாக்கிங்' பந்தயம் நடத்துகிறாள்! கொஞ்ச நேரம் கழித்துப் பாக்கியம் வெளியில் வந்தாள். சேரன் நிச்சயமாகக் காத்திருப்பான் என்று எண்ணினாள். ஏமாந்துவிட்டாள். அவள் மனம் வருந்தியது. அவளுக்கு அழுகை கூட வந்துவிட்டது. தான் சேரனிடம் மிருகத்தனமாக நடந்துவிட்டதாகவே எண்ணிவிட்டாள். அவன் திரும்ப வருவானா......அல்லது வெந்த உள்ளத்தோடு வந்த வழியே போய்விடுவானா? உண்மைக் காதலிருந்தால் இந்த ஒரு ஏமாற்றத்திலேயே மனம் உடைந்துவிடுவானா? ஏமாற்ற வெள்ளம் பாயும் வேகத்தில்தான் காதலின்வலிமைபெருகும். இதை அறிவானா? பாக்கியம் ஏங்கினாள். அவளுக்கு மனம் சரியில்லை. உடனேயே வீட்டிற்குப் போய்விட்டாள்!

அவள் எதிர்பாராத வகையில் சேரன்வந்தான். அவனோடு யாரோ ஒருவனும் வந்திருந்தான். பாக்கியம் அவர்களை முக மலர்ச்சியோடு வரவேற்றாள். தங்கம்மா உடனேயே மூன்று கோப்பைகளில் தேநீர் அளித்தாள். மூவரும் அருந்தினர்.

“இவர் என் நண்பர். நீலன் என்று பெயர். என்னோடு வந்திருக்கிறார்!”

சேரன் அறிமுகத்தை ஆதாரவாக்கிப் பேச்சைத் துவக்கினான். பாக்கியம் புன்சிரிப்பால் நன்றி தெரிவித்தாள்.

“தங்களைச்சந்திக்க நேர்ந்தமைக்கு மகிழ்கிறேன். தாங்கள் படிக்கிறீர்களா?”

என்றாள் பாக்கியம்.

“ஆம், சேரனும், நானும் ஒரே வகுப்பு மாணவர்கள்! எம். ஏ. வகுப்பு இறுதியாண்டு......”

“என் கடிதம் கிடைத்ததா...பாக்கியம்......”

என்று நேரடியாக வந்த வேலையைத் தொடங்கினான் சேரன்.

“கிடைத்தது......மருத்துவமனையில் நடந்து கொண்ட முறைக்கு மன்னிக்க வேண்டுகிறேன். கோபித்துக் கொள்ளாதீர்கள்!”

“கோபிக்கவா வந்திருக்கிறார் இவ்வளவு தூரம், தனது பழைய நாள் தோழியைப் பார்க்க”

பாக்கியம் வெட்கத்தால் தலை குனிந்தாள்.

நீலன் கண்ணொடிப்பால் எதையோ பேசிவிட்டு விடைபெற்றுக் கொண்டான். பாக்கியம் இரவு உணவு அருந்தி விட்டுத்தான் போக வேண்டும் என்று வற்புறுத்தினாள். ஆனால் தக்க காரணம் சொல்லி அவன் நழுவி விட்டான்!

“பாக்கியம்......”

உணர்ச்சிக் கொதிப்போடு அழைத்தான்.

"......................"

அவனும் ஆர்வத்தோடு பார்த் ள். பேசவில்லை. பேசமுடியவில்லை!

அப்பொழுது அடுப்பங்கரையில் ர, புள...எனச் சத்தம் கேட்டது!

"அங்கே யார்...?..."

"வேலைக்காரத் தங்கம்மா!"

"பாக்கியம்......உன்னோடு தனி கப் பேசவேண்டும்... என்னுடன் காஞ்சதூரம் வரலாமா?"

"ஓ......வருகிறேன்......"

பிறகு இருவரும் வெளியில் கிளம் னர். அவள் பக்கத்தில் நடந்து சல்வதுகூடச் சேரனுக்கு ஆனந்த கப்பட்டது. நடந்துசெல்கையிலே றந்த கால நிகழ்ச்சிகள் பல வற் றப்பற்றிப் பேசிக்கொண்டே சென் னர். கடைசியில் நீலனுடைய அறி ரைப்படி முகுந்தனுடைய றைக்கு வந்து சேர்ந்தனர். அங்கு ரும் இல்லை. சேரனிடம்தானே வி இருக்கிறது.........திறந்தான். ள்ளே சென்று அமர்ந்தனர்!

"சுற்றி வளைப்பானேன், பாக்கி ம்......நேரடியாகவே கேட்கிறேன் ,உன்னை நான் விரும்புகிறேன்... தலிக்கிறேன்! என்ன சொல் றாய்?"

மனப்புயலை அடக்கிக்கொண்டு சான்னான்.

"நான் கருப்பி......"

என்று சிரித்தாள். அவள்பார்வை ழிக்குப்பழி வாங்குவது போலத் தரிந்தது!

"சிகப்பு செந்தேள் விஷம் எனக்கு ....கருப்பு கற்கண்டுப்பாகு என அகராதிப்படி!"

"என்னால் குட்டுகள் வாங்கமுடி ாது...மண்டை வீங்கிச் சாகவும் முடியாது!"

"நீ ஆஸ்பத்திரியிலே இருக்கி றயே......இருக்கும் மருந்துகளை டுத்து ஊற்றிக் கொள்ளேன் தலை றையா!"

என்றான், கேலியில் அவளுக்குக் கொஞ்சமும் இளைத்தவனல்லஎன்று காட்டும் நோக்கத்துடன்!

"இதை என்னிடம் சொல்வதைக் காட்டிலும், என் தந்தையிடம் சொல்லுங்கள்...நான் பாக்கியத்தை விரும்புகிறேன் என்று! அவர் தடுத் துச் சொல்லமாட்டார்! தடுத்துரைத் தால் நான் இருக்கிறேன்."

"அப்படியானால்......நீ என்னைக் காதலிக்கிறாயா பாக்கியம்......என் கண்ணே........."

"இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும் கண்ணாளா........."

பாக்கியத்தை அப்படியே தழுவிக் கொண்டான். அவளும் அவனை இறுக அணைத்துக்கொண்டாள் ஆர் வத்தோடு உதடுகளைப் பதித்தான் மறுப்பில்லை. மறுபதிப்பும் கிடைத் தது!

பிறகு பேசிக்கொண்டிருந்தனர் வெகுநேரம்...கதை கதையாக! என்ன தான் செய்தி கிடைக்குமோ, யார் கண்டார்கள்......அங்கே எரிந்து கொண்டிருக்கிற விளக்குக்குத்தான் வெளிச்சம்;

சேரனுக்கு ஏன் அவ்வளவு அவ சரம்......பாக்கியத்தின் கன்னித் தனத்தைப் பாழ்படுத்த அல்லவா துடிக்கிறான்! கற்பைச் சூறையிட அல்லவா பார்க்கிறான்! பாவப்படு குழியில் தள்ளவா காதல் பயன்பட வேண்டும்! விபசாரம் என்ற நச்சு நீரைக்குடிக்கச் சொல்கிறான்...... ஏற்கலாமா? சேரன் நீலனிடம் வாதிட்டபோது எதைப்பாவம் என் றானோ அதைச்செய்யத் தூண்டு கிறான். ஒத்துழைக்க மறுக்கும் அவ ளிடம் கோபம் வருகிறது......வர லாமா? திருமணம் செய்யும்வரை பொறுத்திருக்கத்தான் வேண்டும். அப்படி அவசரப்படுபவன் திரும ணத்தை விரைவில்முடிக்கட்டுமே... இவன் நன்றாகப்படித்து வைத்திருக் கிறான் என்பதற்காக மார்ச்சில் வைக்கவேண்டிய தேர்வை ஜனவரி யிலேயே வைத்துவிடுவார்களா?

(தொடரும்)

# நாடகக்கலை—அவரது கருத்து

★

சிறந்த கலையுள்ளம் படைத்தவர், கவிஞர், நாடகாசிரியர்! ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலெல்லாம் சுற்றுப் பய ணம் செய்து நாடகத்துறைபற்றிய அனுபவங்களைத் திரட்டிச் சேகரித் துக்கொண்டு திரும்பியவர். இந்தியக் 'கவிதைக்குயில்' என்று பாராட் டப்பெற்ற மறைந்த சரோஜினி அம்மையாரின் தம்பி, அரீந்திரநாத் சட் டோபாத்யாயாவின் எண்ணங்கள் இவை.

பெங்களூரில் வெற்றிகரமாக நடைபெற்றுவரும் நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபைக்குச் சென்று, நாட கத்தைக் கண்டு மகிழ்ந்து, அறிவுப் பிரச்சார நாடகங்களின் அவசியம் குறித்து, உணர்ச்சிப் பெருக்குடன் அவர் ஆற்றிய சொற்பொழிவில் சிந்திய மணிகள் இவை:—

நான் ஒரு கலைஞன்—குறிப்பாகச் சிறுவயது முதற்கொண்டே நாடகப் பித்துப் பிடித்தவன். நாடக அரங்கின் மூலமாக எண்ணங்களை மக்களுக்குத் தெரிவிக்கவேண்டு மென்பதற்காகப்பெரும்போராட்டங் களிலே ஈடுபட்டவன்.

நியாயப்படி அரசாங்கம் இவர் களுடைய—சினிமா மூலம் பெறும் செல்வத்தை தன்னுடைய நாடகக் கனவுகள் நனவாக மாற ஆர்வத்து டன் செலவழிக்கும் கலைஞர்களு டைய— கலைத்தொண்டைப் பயன் படுத்த முன்வரவேண்டும். அத வது இம்மாதிரியான ஸ்தாபனங் களை ஆதரித்து இவர்களுடைய திறமைகளைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் நம் முடைய அரசாங்கம் இம்மாதிரி யான சீரிய முயற்சிகளுக்கு ஊக்க மும் ஆக்கமும் தராமல் இருப்ப தைக் கண்டு வருந்துகிறேன்— வெட்கப்படுகிறேன்.

நம்முடைய அரசாங்கம் கலைஞர் களைச் சிரமப் படச்செய்வதிலும், அலையவிடுவதிலும் அலாதியான ஆனந் தங்கொண்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலிருந்து வேற்று நாடுகளுக்கு 'கிராமபோன் ரிகார்டு'களைப் போன்று சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளைத் தூதுவர்களாக அனுப்புவதைவிட, நம்நாட்டுச்சிறந்த கலைஞர்களை எட்டுத் திக்கிலும்—உல கெங்கிலும் அனுப்பினால் நம் நாட் டின் அந்தஸ்து உலகிலே வளரும்; கலாச்சாரத் தொடர்பு ஏற்படும்; உருவான பயனும் விளையும்

★

# படிப்பகம்

## தென்னாட்டு வீரர்கள்:

ஆசிரியர்: வித்துவான் வை. சுப்பிரமணியம்

இடிந்துபோன கோட்டை கொத்தளங்கள் மடிந்துபோன மன்னர்களின் வெற்றிச் சின்னங்களாக நிற்கின்றன—நமது நாட்டில் நானுவிடங்களில்!

தமிழகம் 'தாழ்ந்து' விட்டதன் விளைவு, அந்தக் கோட்டைகளின் சரிதங்கள் மக்களிடையே தெரியவில்லை—பரப்பப்படவில்லை. தமிழகத்தின் மண்ணில் நடைபெற்ற சரித நிகழ்ச்சிகள்—சாம்பலாகி விட்டன; மதிப்புத்தரப்படாமல் மங்கிப்போய் விட்டன!

'வாராண்டி, வாராண்டி வெள்ளைக்காரன்!' என்ற கிராமீயப் பாடல் 'பல்லே நறநற வென்றுகடித்தானேயா ராஜா தேசிங்கு' என்ற தெருக் கூத்துப் பாட்டு, போன்றவைகளால் மாண்ட வீர மரபினரின் நினைவு மக்களிடையில் இருக்கிறதென்றாலும், அவை கட்டுக்கதைகள் போல்காட்சியளிக்கின்றனவே யொழிய, கவனத்தைக் கவரவில்லை.

பாஞ்சாலங் குறிச்சி—செஞ்சிக் கோட்டை இந்த இரண்டு இடங்களும் நெஞ்சைச் சிலிர்க்கச் செய்யும் கட்டப் பொம்மு, தேசிங்கு மன்னன் ஆகியோரின் நினைவுச் சின்னங்கள்!

இந்தச் சின்னங்கள் இருக்கின்றன; ஆனால் இவைகளில் மறைந்து கிடக்கும் தமிழ் நாட்டின் வீர அத்தியாயம் சிந்தனைகளைக் கிளறவில்லை; அதற்கான முயற்சிகள் முளைக்காததால்!

வித்துவான் சுப்பிரமணியத்தின் முயற்சி 'தென்னாட்டு வீரர்கள்' மாணவர்களுக்கேற்ற வகையில், பாடபுத்தகமாகப் பயன்படும் நிலையில் எழுதப்பட்டுள்ளது.

விலை 0—14—0

முகவரி:-

அசோசியேஷன் பப்ளிஷிங் ஹவுஸ்
94—95-புதுத்தெரு, மண்ணடி
சென்னை 1.

*　　*　　*

## சுடாத நெருப்பு

ஆசிரியர், 'ரவி'

நெஞ்சையள்ளும் கவிதைகளின் தொகுப்பு நூல். புதுமைப்பாதையின் கருத்தோவியங்கள் — எளிய தமிழில் துள்ளிவிளையாடுகின்றன!

காதல், இயற்கை, தமிழ், சமூகம், கலை, தொழிலாளர் — குறித்த கவிதைகள் சிந்தனைக்கு விருந்து.

விலை 1—4—0.

பெறும் இடம்:-

**'தமிழ்ப் பொழில்'**
31, சிம்மக்கல்தெரு, மதுரை.

X　　X　　X

## காதற் பலி

ஆசிரியர், சி. சுந்தரேசன்;

வாலிப உள்ளங்களில் காதலின் விளைவாக எழும் போராட்டங்களை வைத்துப் பின்னப்பட்ட கதைநூல்.

விலை 0—4—0.

பெறும் இடம்:-

**பாரதி பதிப்பகம்,**
151, வக்கீல் புதுத்தெரு,
மதுரை.

X　　X　　X

## ஓரே வழி

ஆசிரியர், சி. அரசப்பன்,

தமிழின் சிறப்பு, இனத்தின் பெருமை, எதிர்காலம் இன்பமயமாக வேண்டும் என்ற ஆசை, ஆகியவைகளைத்தெளிந்த தமிழ் நடையில் தீட்டியுள்ளார் தமிழாசிரியர்தோழர் அரசப்பன்.

விலை 0—5—0.

பெறும் முகவரி:-

**புலவர் அரசப்பன்,**
மெய்யுணர்வுக் கழகம்,
சாத்தனூர் P. O.
திருக்காட்டுப்பள்ளி.

X　　X　　X

## "வைரம்"

தோழர் வைரவேலுவை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் அரசியல் சமுதாயச் சீர்திருத்த இதழ்.

விலை 0—3—0.

முகவரி:-

96, சாமி நாயக்கர்தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

X　　X　　X

## "தமிழர் ஆட்சி"

தோழர் எஸ். சி. ரங்கசாமி இம்மாத வெளியீட்டின் ஆசிரியர். புதிய கட்சியாகிய அகில இந்தியக் குடியரசுக் கட்சிபற்றிய கருத்துக்கள் இருக்கின்றன.

விலை 0—0—6.

முகவரி:-

11/6 சையத்காதர்சாயபுதெரு
அரிசிப்பாளையம், சேலம்.

## சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press.
105, Tirukkachinambi Street, Kancheepuram.